உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 28 ] சௌமிய - சித்திரை - 10—5—69 [ இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## பெரியோன்

'பெருமை, சிறுமை' என்பன, தமிழில் பொருள்களின் அளவைக் குறிக்கும் சொற்களாகும். அவ் அளவையுடைய பொருள்கள் காட்சிப் பொருளாயும் இருக்கும்; கருத்துப் பொருளாயும் இருக்கும். 'இம்மலை பெரிது; அம்மலை சிறிது; இக்குடம் பெரிது; அக்குடம் சிறிது; சாத்தனுக்குத் தலை பெரிது; கண் சிறிது' என்றாற்போலக் காட்சிப் பொருள்களைக் குறித்தலேயன்றி, 'சாத்தனுக்குப் புகழ் பெரிது; பழி சிறிது; கொற்றனுக்குக் குணம் பெரிது; குற்றம் சிறிது'

என்றாற்போலக் கருத்துப் பொருள்களையும் வழங்கக் காண்கின்றோம். ஆகவே, பெருமை, சிறுமை என்பன எப்பொருளின் அளவையேனும் குறித்துநிற்கும் என்பது விளங்கும்.

இனிச் சார்த்து வழக்கால் (இலக்கணையால்) 'பெருமை, சிறுமை' என்பன நற்குணத்தின் மிகுதியையும், குறையையும் குறித்தல் உண்டு. இம்முறை பற்றியே, 'பெரியார், சிறியார்' என்பன நற்பண்பு மிக்கவரையும், அப்பண்பு குறைந்தவரையும் குறித்து நிற்கின்றன. மக்களில் சிலரை, 'பெரியோர், சிறியோர்' எனக் கூறினால், அவை அவரது வடிவின் அளவைப் பற்றாது, நற்பண்பின் அளவை மட்டுமே பற்றிநிற்கும். ஆனால், கடவுளரை அவ்வாறு குறிக்குமிடத்து அவை அவரது இறைமைக் குணத்தின் அளவோடு பொருள் அளவையும் குறிப்பனவாம். "ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி"* "பெரியாய் சிறியாய் பிறையாய் மிடறு - கரியாய்"† என்றாற்போலும் இடங்களில் பெருமை, சிறுமை என்பன பொருள் அளவையே குறித்து நிற்றல் அறியத் தக்கது.

பொருள்களின் அளவை நோக்கும்பொழுது ஒன்று மற்றொன்றைவிடப் பெரிதாய் அல்லது சிறிதாய் இருத்தல் இயல்பு. ஆயினும், ஒருபொருளே ஏனை எல்லாப் பொருளினும் பெரிதாயும், சிறிதாயும் இருத்தல் இயலாது. எனினும் கடவுட் பொருள் அத்தன்மைத்தாய் இருத்தலை அதனைத் தலைப்பட்டுணர்ந்தோர் வியந்து கூறுகின்றனர். அஃதாவது கடவுட் பொருள், 'பெரியது' எனப்படும் பொருள்கள் எல்லாவற்றினும் பெரியதாயும், 'சிறியது' எனப்படும் பொருள்கள் எல்லாவற்றினும் சிறியதாயும் உள்ளது எனக் கூறுகின்றனர்.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன்"‡

* திருத்தாண்டகம் - 574.
† திருமுறை 2 - 20. 8.
‡ திருவாசகம் திருவண்டப்பகுதி 1 - 6

"அனேகன் ஏகன் அணு அணுவில் இறந்தாய்"* என்றாற் போல்வன காண்க.

'கடவுள் எல்லாப் பொருளினும் பெரிய பொருளாய் உள்ளான்' என்றல் பொருந்தும்; 'எல்லாப் பொருளினும் சிறிய பொருளாய் உள்ளான்' என்றல் பொருந்துமோ எனின், 'சிறுமை' என்பதை இங்கு நற்பண்பு இன்மை என்னும் பொருளில் கொள்ளுதல் கூடாது. மற்று, அளவுபற்றியே கொள்ளுதல் வேண்டும். இறைவன் 'எல்லாப் பொருளினும் பெரிய பொருளாய் உள்ளான்' என்றால், 'எல்லாப் பொருளும் அவனது அகத்தே அடங்கியுள்ளன' என்பது பொருளாம். எல்லாப் பொருள்களும் இறைவனுள்ளே அடங்கியிருக்கின்றன என்றால், அவன் எல்லாப் பொருள்கட்கும் வெளியில் நிறைந்தவனாகின்றான். இஃது உண்மை ஆயினும், இறைவன் எல்லாப் பொருளிடத்தும் வெளியில்மட்டும் நிறைந்திருக்கவில்லை; அவற்றின் உள்ளேயும் நிறைந்திருக்கின்றான் என்பதுதான் உண்மை நூல்களில் சொல்லப்படுவது. அவ்வாறாயின், அவன் அணுவினுள்ளும் அணுவாய் இருத்தல் வேண்டும் அன்றோ? அதனால் தான் அவன் பெரியதிற் பெரியனாதல்மட்டுமன்றி, 'சிறியதிற் சிறியனுமு உளன்' என்றும் கூறுகின்றனர். இது வியப்பிற்குரியதே என்றாலும், இறைவன் சடப்பொருளாயில்லாமல், சிற்சத்தி வடிவினனாய் இருத்தலின் இஃது அவனுக்கு இயல்பதாகின்றது. எனவே, இவ்வாறிருத்தலே கடவுள் தன்மை அல்லது பரத்துவம் என்பது தெளிவாகின்றது.

பெரியதினும் பெரியதாதல், சிறியதினும் சிறியதாதல் என்பவற்றில் பெரிதாந்தன்மையே பெரும்பான்மையாக எடுத்துப் பேசப்படும். 'கடவுட் பொருள் மிகப்பெரும்பொருள்' என்பதும், 'கடவுளே எல்லாரினும் பெரியவன்' என்பதும் பொதுவாக அனைவரும் சொல்லுகின்ற கொள்கைகள். 'பிரமம்' என்ற வடமொழிப் பதத்திற்கும், 'பெரியது' என்பதே பொருள். இவ்வகையில் சிவபெருமானுக்கே 'பெரியோன்' என்ற பெயர் சொல்லப்படுகின்றது. 'மகாதேவன், மாதேவன்' என்பனவும் சிவபெருமானையே குறிக்கின்றன. "பெரியோன்

---

* திருவாசகம் - திருச்சதகம் 25.

தருக இருந்த லாகென".* "பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்" † என்ற சிலப்பதிகார வரிகள் இங்குக் காணத் தக்கன.

சிவபெருமானது பெருநிலையை, மாணிக்கவாசகர், "பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர் - போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே" ‡ "கீதம் இனிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான் பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக் கப்பால் - சோதி மணிமுடி சொல்லில் சொல்லிறந்து நின்ற தொன்மை" £ என்று கூறுகின்றார். இப் பெருநிலையை விளக்குவதே பிரம விட்டுணுக்கள் அடிமுடி தேடி அறியாது நின்ற வரலாறு. இது பலவிடத்தும் கூறப்படு மாயினும், சிறப்பாக இதனைக் கொண்டு நிற்பது இலிங்க புராணம். இவ்வரலாறும் புராணபேதம் பற்றி ஆங்காங்குச் சிறுசிறு வேறுபாடுகளுடன் காணப்படும். அவற்றுள் திருநாவுக் கரசர் தமது தசபுராணத்துட் குறிப்பிடும் வரலாறு பின்வருமாறு கூறப்படுவதேயாம்.

'சதுர் யுகம் இரண்டாயிரங் கொண்டது பிரமதேவனுக்கு ஒருநாள் ஆகும். ஆகவே ஆயிரம் சதுர் யுகம் முடிந்தால் பிரம தேவனுக்கு ஒரு பகல் முடிந்ததாம். அப் பகற்காலம் நீங்கிய பின் பிரமன் உறக்கம் கொள்வான். அக்காலம் உலகம் அழிவதாகிய நித்திய கற்பமாம். இம்முறையில் நூறாண்டுகள் சென்றால் ஒரு பிரமதேவனுக்கு வாழ்நாள் முடியும். அது, 'மகாகற்பம்' எனப்படும். இத்தகைய கற்பங்களுள் ஒரு நித்திய கற்பத்தில் பிரமதேவன் உறங்கிவிட, உலகம் பிரளய வெள்ளத்தால் மூடப்பட்டு அழிந்தது. அதன்பின் அக்கற்ப முடிவில் பிரமதேவன் உறக்கம் நீங்கி எழுந்து எங்கும் யாதொரு பொருளும் இன்றிப் பிரளய வெள்ளம் ஒன்றையே கண்டான். ஆயினும், அப்பிரளய வெள்ளத்தில் கரிய மேகம் போலும் நிறத்துடன் திருமால் அரவணைமேற் பள்ளிகொண்டு உறங்கு

---

* மனையறம் படுத்த காதை - 41.
† இந்திரவிழவூர் எடுத்த காதை - 169.)
‡ திருவெம்பாவை - 10.
£குயிற்பத்து - 1.

வதைக் கண்டு அதிசயித்து அவர் அருகிற் சென்று அவரை எழுப்பி, 'நீ யார்' என்று வினவினன். திருமால் இவ்வண்டங்களை யெல்லாம் காக்கின்ற முதற்கடவுள் நான்தான்' என்றார். பிரமன் சிரித்து, 'உலகிற்கு முதல்வன் நீயும் அல்லை; வேறொருவரும் அல்லர். உலகத்தை உண்டாக்குபவன் நானே; அதனால் நானே உலகிற்கு முதல்வன்' என்றான்.

இவ்வாறாக இருவர்க்கும் பூசல் வளர்ந்து பெரும் போராக மாறியது. வில்லெடுத்துத் தேவாத்திரங்களை ஏவிக் கடும்போர் புரிந்தனர். அப்பொழுது பிரமன் பாசுபதாத்திரத்தை விடத் திருமால் உருத்திராத்திரத்தை ஏவினர். அவ்விரண்டு அத்திரங்களும் பதினயிரம் யாண்டுகள் தம்முட் போர் புரிந்தன. அப்பொழுது சிவபெருமான் அவற்றிற்கிடையே பெரியதொரு அக்கினித் தம்பமாய்த் தோன்றி நின்றார். போர் புரிந்த இரண்டு அத்திரங்களும் அவ்வக்கினித் தம்பத்துள்ளே சென்று மறைந்தன. அதைக்கண்ட பிரம விட்டுணுக்கள், 'இத் தம்பத்தின் அடியையும், முடியையும் காண்பவரே நம்மிற் பெரியவராவர், எனச் சொல்லி அவற்றைக் காணத் தொடங்கினர். பிரமதேவன் அன்ன உருவங்கொண்டு ஆயிரம் ஆண்டுகள் ஆகாயத்திற் பறந்து சென்றும் முடியைக் காணமாட்டாது சிறகொடிந்து மீண்டான். திருமால் வராக வடிவம் கொண்டு ஆயிரம் ஆண்டுகள் பூமியைப் பிளந்து சென்றும் அடியைக் காணமாட்டாது இளைப்புற்று மீண்டார். பின் இருவரும் ஒன்றும் தோன்றாது நிற்க பிரணவம் தோன்றி நான்கு வேதங்களாய்ப் பரிணமித்து சிவபெருமானது பரத்துவங்களை எல்லாம் எடுத்துக் கூறி, 'இது சிவபெருமானது திருவுருவமே, அப்பெருமானே உலகிற்கு முதல்வன்' என அறிவுறுத்து மறைந்தது. அதனைக் கேட்டவுடன் அயனும், மாலும் மயக்கம் ஒழிந்து சிவபெருமானைப் பலவாறு துதிக்கச் சிவபெருமான் அக்கினித் தம்பத்தினின்றும் தோன்றி, வேண்டும் வரங்களைக் கொடுத்து மறைந்தார். பிரம்ம விட்டுணுக்களின் முன் தோன்றிய அனற் பிழம்பு வடிவமே சிவலிங்க மூர்த்தமாகும். இவ்வரலாற்றினல் சிவபெருமானது எல்லையற்ற பெருநிலை விளங்குதலின், நாவுக்கரசர் இதனைக் குறிப்பிட்டு, 'இத்தகைய நிலையையுடைய பெரியோன் சிவபெருமான்' எனக் கூறி, 'அவனே நமக்குப் புகலிடமாவான்' என அருளிச் செய்கின்றார். அத்திருப்பாடல் இது.

நிரவொலி வெள்ளம் மண்டி நெடுஅண்டம் மூட
நிலம்நின்று தம்ப மதுஅப்
பரம்ஒரு தெய்வம் எய்த இதுஒப்ப தில்லை
இருபாலும் நின்று பணியப்
பிரமனும் மாலும் மேலை முடியோடு பாதம்
அறியாமை நின்ற பெரியோன்
பரமுத லாய தேவர் சிவனுய மூர்த்தி
அவனும் நமக்கொர் சரணே.

[ 'பிரமனும், மாலும் பின்பு நிலம் நின்று பணிய, முன்பு அறியாமை நின்ற பெரியோன்' எனவும், 'ஒருதெய்வம் பரம் (பரத்துவத்தை) எய்துவதற்கு இது ஒப்பது (இவ்வாறு அழற் பிழம்பாய் நிற்பதோடொத்த தன்மை) வேறு இல்லை' எனவும் பொருள் கொள்க. ]

இவ்வாலாற்ருல் சிவபெருமான் ஒருவனே பெரியோன் ஆதலையறிந்து பணி செய்து பயன் பெறுவோமாக.

---

## விசேஷ நாட்கள்

### 10—5—69 முதல் 10—6—69 முடிய

| | |
|---|---|
| 13—5—69 | பிரதோஷம் |
| 16—5—69 | கிருத்திகை |
| 20—5—69 | நம்பியாண்டார்நம்பிகள் திருநக்ஷத்திரம் |
| 22—5—69 | சேக்கிழார் ,, |
| ,, | நமிநந்தியடிகள் |
| 23—5—69 | சோமாசிமாற நாயனர் ,, |
| 25—5—69 | தருமையாதீனம் 24-வது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் குருபூஜை |
| 27—5—69 | ஞானபுரீசுவரர் மகோற்சவக் கொடியேற்றம் |
| 29—5—69 | பிரதோஷம் |
| 2—6—69 | முருகநாயனர் திருநக்ஷத்திரம் |
| ,, | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் திருநக்ஷத்திரம் |
| ,, | திருநீலகண்டயாழ்ப்பாண நாயனர் ,, |
| ,, | திருநீலநக்கநாயனர் ,, |
| 5—6—69 | ஸ்ரீலஸ்ரீ ஆதிகுருஞானசம்பந்தர் குருபூஜை |
| 6—6—69 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பட்டணப் பிரவேசம். |

உ

குருபாதம்

## குருவருள்

# அறநெறியும் அருள்நெறியும்

### "உலகியல் நீங்கல்"

'அறிவுடையதும், அறிவில்லதும்' என உலகம் இரு பகுதியை உடையது. உயிர்கள் பலவும் அறிவுடை உலகம். ஏனைய எல்லாப் பொருள்களும் அறிவிலா உலகம். அறிவுடை உலகத்தை, 'சேதனப் பிரபஞ்சம்' என்றும், அறிவிலா உலகத்தை, 'அசேதனப் பிரசஞ்சம்' என்றும் கூறுவர். நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்புக்களாய்த் தேவர் முதலாகத் தாவரம் ஈறாக உள்ள பிறவிகள் சேதனமும், அசேதனமும் கலந்து இயங்கும் கலப்புலகம். அஃதாவது, மேற்கூறிய பிறப்புக்களில் உடம்புகள் யாவும் அசேதனம்; அவற்றிற் கலந்துநின்று அவற்றை இயக்கிநிற்கும் உயிர்கள் யாவும் சேதனம்.

இருதிற உலகத்துள் அறிவுடை உலகமாகிய உயிர்களின் அறிவு இடையறாது வளர்ந்துவரும் இயல்புடையது. ஆகவே, அவ்வளர்ச்சிக்குத் துணைபுரிந்து நிற்பனவே 'அறிவிலா உலகம்' எனப்படும் ஏனைய பொருள்கள் யாவும். அதனால், ஒருநிலையில் உயிர்கட்கு வேண்டும் பொருள்களாய்க் கொள்ளப்படும் பொருள்கள், அடுத்த மற்றொரு நிலையில் வேண்டாப் பொருள் களாய்த் தள்ளப்படும் பொருள்களாகின்றன. எடுத்துக் காட்டாக, குழந்தைப் பருவத்தில் அவற்றின் பயிற்சிக்கும், மகிழ்ச்சிக்கும் இன்றியமையாதனவாய்க் கொள்ளப்பட்ட விளையாட்டுப் பொருள்கள், அப்பருவத்தைக் கடந்த பின்பு வேண்டாப் பொருள்களாய்ப் புறக்கணிக்கப்படுகின்றன. தொடக்கப்பள்ளியில் பயிலும் இளஞ்சிறார்க்கு அப்பொழுது இன்றியமையாது வேண்டப்பட்ட சிறு புத்தகம், கற்பலகை முதலியவை அப்பள்ளியைக் கடந்து இடைநிலைப் பள்ளியை அடைந்த காலத்து வேண்டாதனவாகிவிடுகின்றன. இப்படி எத்துணையோ உதாரணங்களைக் கூறலாம்.

சில விளையாட்டுப் பொருள்களை வைத்து விளையாடி மகிழ்கின்ற குழந்தை ஒன்று, ஒன்றிரண்டு ஆண்டுகள் சென்ற பின்பும் அதனை வெறுத்து ஒதுக்காமல் விருப்பங்கொண்டு பற்றியிருக்குமாளுல் அச்செயல் அதன் பெற்றோர்களுக்கோ, மற்றவர்களுக்கோ மகிழ்ச்சியைத்தராது; மாருக வருத்தத்தைத் தருவதாகும். ஏனெனில், அந்நிலை குழந்தையினது வளர்ச்சி யின்மையையே காட்டுவதாமாதலின். அவ்வாறே தொடக்கப் பள்ளியிற் பயின்ற இளஞ்சிறுன் ஒருவன், அங்குப் படித்த புத்தகத்தை விடுத்து அதனினும் சிறந்தபுத்தகத்தை விரும்புதல் இன்றி மீண்டும் அதனைப் படிப்பதிலேயே விருப்பம் உடைய வனுய் இருப்பின், அதுவும் வருத்தத்திற்குரியதே. இஃது உலகியல் முறைமை. ஆன்மீகத் துறையிலும் இந்நிலைதான் உள்ளது.

'அறம், பொருள், இன்பம், வீடு' என மக்கள் அடையும் உறுதிப் பொருள்கள் நான்கு. இவைகளை இவ்வரிசையில் கூறுவது ஒரு முறையாயினும், 'இன்பம், பொருள், அறம், வீடு' எனக் கூறும் மற்ருெரு முறையும் உண்டு. இம் முறையே மக்களின் அறிவு வளர்ச்சி முறைக்கு ஏற்றது. அஃதாவது, எல்லா உயிர்கட்கும் இன்பத்தை விரும்புதல் இயல்பாதலின், மக்களும் அதனை விரும்பிநிற்றல் தொடக்க நிலையேயாம். 'இன்பம்' என்பது, உலகின்பமாகிய சிற்றின் பத்தையே. எனவே, அதனை விரும்புதல் அறிவு வளர்ச்சி பெருத காலத்ததேயாம்.

எல்லா உயிர்களும் இன்பத்தை விரும்புகின்றன என்ருலும் அதனை நன்கமைத்துக்கொள்ளும் வழியை அவைகள் உணர்வ தில்லை. மக்களாய்ப் பிறந்தோரே அதனை அறிந்து அமைத்துக் கொள்கின்றனர். அவ்வழியாவது பொருளை ஈட்டி வைத்துக் கொள்ளுதலாம். ஆகவே, எல்லாம் பொருளினுல் வரும் என்பது அறிந்து அதனை விரும்புதல் அறிவு வளர்ச்சியின் இரண்டாவது நிலை என்னலாம்.

பொருள் இம்மை இன்பத்தை மட்டுமே தருவது. அறம், மறுமையிலும் வந்து இன்பத்தைத் தருவதாகும் என்று அறத் தின் இயல்பை அறிந்து, பொருளால் இன்பத்தை மட்டும் நுகர்ந்துவிட்டுப் போகாமல் அறத்தைத் தேடிக்கொள்ளுதல் வேண்டும் என விரும்புதல் அறிவு வளர்ச்சியின் மூன்ரும்

நிலையாகும். இம்மை, மறுமை என்னும் இரண்டும் சில உலகங்களிற் பிறந்து அடையும்பயன்களேயாதலின், அவற்றைத் தருவனவாகிய 'அறம், பொருள், இன்பம்' என்னும் மூன்றும் 'உலகியல்' எனப்படும்.

பொருள் இன்பங்களால் இம்மைப்பயனை மட்டும் அடைந்தொழியாது அறத்தினால் மறுமைப் பயனையும் அடைய விரும்பிய பின், இம்மையாயினும், மறுமையாயினும் பிறவித் துன்பத்தில் நின்றே அடையப்படுவன என்பதை உணர்ந்து, அத்துன்பத்தினின்றும் நீங்கி வீட்டை அடைய விரும்புவது அறிவு வளர்ச்சியின் நான்காவது நிலையாகும். இதுவே அறிவின் முடிந்த வளர்ச்சி. எனவே, இவ்வளர்ச்சியைப் பெறுதவர்க்கு உலகியல், வேண்டப்படும் பொருளாயும், பெற்றவர்க்கு அது வேண்டாது வெறுக்கத்தக்க பொருளாயும் நிற்கும். ஆகவே, உலகியல் ஒருகாலத்தில் வேண்டப்படுவதேயாயினும், அஃது எக்காலத்தும் பற்றிநிற்கத்தக்கதன்றும். ஆகவே, ஒவ்வொருவரும் ஒருகாலத்தில் அதனின்றும் நீங்கியே ஆகவேண்டும்.

பற்றுங்காலத்து ஒன்றைப்பற்றினால், விடுங்காலத்து அதனை நாம் விடவேண்டினாலும் அது நம்மை விடுவதில்லை. அது பொழுது நாம் அதனை விடுதற்கு வேண்டிய உபாயங்களால் விடுதல்வேண்டும். அஃதாவது உடல் நலத்தின்பொருட்டுச் சில மருந்து எண்ணெயை உடம்பிற் பூசுக்கொண்டவன் பின்பு அதனைப் போக்க நினைத்தாலும் போகாது மாற்றுப் பொருள்களைக்கொண்டு முயன்று தேய்த்துப் போக்கிக்கொள்ளுகின்றான். அதுபோல, ஒரு காலத்தில் பற்றிக்கொண்ட உலகியலைப் பின்னொரு காலத்து விடநினைத்தாலும் அது விடுவதில்லை. அதற்கு மாற்றுப் பொருளாய் உள்ளது இறைவன் திருவருளே. அதனைப் பற்றிநின்றுதான் உலகியலில் நீங்கி வீடு பெறுதல்வேண்டும். அதனால், அத்திருவருளைப் பற்ற மாட்டாதார் உலகியலாகிய ஆழ்கடலினின்றும் கரையேற மாட்டாது அதனுள்ளே அழுந்தியொழிவர். இதனையே திருவள்ளுவர்,

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது"

என்றார்.

'அறம்' என்பது, பொதுவாக இம்மை மறுமையாகிய உலக இன்பத்தைத் தரும் உலகியல் அறத்தையே குறிப்ப தாயினும், வீடுபேற்றைத் தருவதாகிய மெய்யுணர்வையும் அறத்துள் அடக்கி, 'அறம்' என வழங்குவர். அஃதாவது, 'இல்லறம், துறவறம்' என அறத்தை இருகூறுக்கி, இல் லறத்தையே, 'உலகியல்' என்றும், துறவறத்தை 'மெய்ந்நெறி' எனவும் கொள்வர். மெய்ந்நெறி யொழுக்கத்தின் பயன் மெய்யுணர்வு. அதனால், அஃது 'அறம்' என்றும் சொல்லப் படுகின்றது.

இன்பம், பொருளின் வழிப்பட்டது; பொருள் அறத்தின் வழிப்பட்டது; அறம், இறைவன் வழிப்பட்டது. ஆதலின், எல்லாப் பொருளும் இறைவன் வழிப்பட்டனவே. அதனால், ஒன்றைப் பெறவேண்டினும், நீங்கவேண்டினும் இறை வனது திருவருளையே துணையாகப் பற்றுதல்வேண்டும். அம் முறையில் உலகியலைப் பெறுவதற்கு, "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார் - நிலமிசை நீடுவாழ்வார்" எனக் கூறிய திருவள்ளுவர், அதனின் நீங்குதற்கு "அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால் - பிறவாழி நீந்தல் அரிது" எனக் கூறினர். இதனுள், இறைவனை "அற ஆழி" எனக் கூறியது, மேற்குறித்தவாறு, இறைவன் அறத்தின்வழி எல்லாப் பொருள் களையும் ஆள்பவன் என்பதைக் குறித்தற்கேயாம். "அறம்" என்றது இங்கு மெய்யுணர்விற்குக் காரணமான துறவறத்தை யும் உட்படுத்தியேயாம். 'எல்லாப்பொருள்களையும் ஆள்பவன்' எனவே அவனே தலைவனுதல் பெறப்பட்டது. 'எப்பொருட்கும் தலைவன்' என்பதோடு, 'அருள் மிக்கவன்' என்பதைக் குறித்தற்கே "அந்தணன்' என்றும் கூறினர். 'இறைவன் எப்பொருட்கும் தலைவனும் பேரருள் உடையவனும் உள் ளான்' எனவே, 'அவனது அருளைப் பெற்றவர்க்கு அரிய தொன்று இல்லை' என்பதனேடு, 'அவனது அருளையின்றி ஒன்றையும் பெறுதல் இயலாது' என்பதும் போந்தது. ஆகவே, அறிவு முதிர்ந்த நிலையில் உலகியலின் நீங்கவேண்டின் அதன் பொருட்டும் அவனது திருவருளையே பெறல்வேண்டும் என்பது விளங்கிற்று. அருளைத்தான் திருவள்ளுவர், 'தாள்' என்றும், 'அடி' என்றும் குறிக்கின்றார்.

'முதற்கண் "அற ஆழி" என்று கூறிப் பின்னர் "பிற ஆழி" என்றதனால், அத்தொடர் அறம் ஒழிந்த பொருள்,

இன்பங்களையே குறிக்கும் 'பொருளும், இன்பமும் உலகியல்' என்பது தெளிவு. எனவே, பிற ஆழி நீந்தல் என்பது, 'உலகியலைக் கடத்தல்' என்பதும், 'அஃது இறைவன் தாள் சேர்ந்தார்க்கே இயலும்; ஏனையோர்க்கு இயலாது' என்பதும் மேற்காட்டிய 'அறஆழி அந்தணன்' என்னும் குறளால் அறியப்படும். பொருளும், இன்பமும் ஆகிய உலகியல்கள் அவற்றிற்கு ஏதுவாகிய அறம் இன்றி ஆகாமையின், காரியமாகிய அவற்றினின்றும் நீங்குதல் கூறவே, காரணமாகிய உலகியல் அறத்தினின்றும் நீங்குதல் தானே பெறப்பட்டு, மெய்யுணர்விற்கு ஏதுவாகிய மெய்ந்நெறி அறம் ஒன்றையே பெற்று நிற்றல் பெறப்படும். இதனை வேறொரு வகையில் சுருங்கக்கூறுவோமாயின், 'இறைவனடியைச் சார்ந்தவரே அஞ்ஞானத்தின் நீங்கி மெய்ஞ்ஞானத்தைப் பெறுவர்; அல்லது கட்டு நீங்கி வீடு பெறுவர் என்று கூறலாம். ஆகவே, திருவள்ளுவர் கூறும் ஞானநெறி எது என்பது நன்கறியப்படும். திருமுறைகளும், சைவ சாத்திரங்களும் இதைத்தான் கூறுகின்றன.

" ஞானத் திரளாய் நின்ற பெருமான்
நல்ல அடியார்மேல்
ஊனத் திரளை நீக்கும் அதுவும்
உண்மைப் பொருள்போலும் "

" நஞ்சமுது செய்தமணி கண்டன்நமை
ஆளுடைய ஞான முதல்வன் "

" வினையாதஒர் பரிசில்வரு பசுபாச வேதனை ஒண்
தளையாயின தவிரவ்வரு தலைவன் "

" நீரார் நிமிர்புன் சடைஎம் நிமலனை
ஓரா தவர்மேல் ஒழியா ஊனமே "

" பாச மான களைவார்
பரிவார்க் கமுத மனையார் "

" வீடும் ஞானமும் வேண்டுதி ரேல்விர தங்களால்
வாடின் ஞானம் என்னவதும் எந்தை வலஞ்சுழி
நாடி ஞானசம் பந்தன செந்தமிழ் கொண்டிசை
பாடும் ஞானம்வல் லார்அடி சேர்வது ஞானமே "

— சம்பந்தர்.

"நல்லக விளக்கது நமச்சி வாயவே"

"நன்னெறி யாவது நமச்சி வாயவே"

"நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்"

"ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானங் காட்டுவர் தம்மடைந் தார்க்கெலாம்
தானங் காட்டித்தன் தாளடைந் தார்கட்கு
வானங் காட்டுவர் போல்வன்னி யூரரே"

"திருவிழி மிழலையானைச் சேராதார் தீநெறிக்கே
சேர்க்கின் றாரே" — அப்பர்.

"இலையால் அன்பால் ஏத்து மவர்க்கு
நிலையா வாழ்வை நீத்தார்"

"மலமெ லாம் அறும் இம்மையே;
மறுமைக்கும் வல்வினை சார்கிலா
..................எங்கள் சங்கரன் வந்து
தங்கும் ஊர் - புறம்பயந்தொழப் போதுமே"

"... ... ... கழற்சேவடி என்றும்
கலந்துனைக் காதலித் தாட்செய்கிற் பாரை
ஆண்டு நம்பிஅவர் முன்கதி சேர
அருளும் நம்பி"

"ஊன மாயின தீர்க்கவல்லான்"

"மேவியவெந் நரகத்தில் அழுந்தாமை நமக்கு
மெய்ந்நெறியைத் தான்காட்டும் வேத முதலானை"

"நாள்தொறும் வணங்கு வார்க்கு
அறிவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பன்"

'மெள்ள நின் றவர் செய்வன வெல்லாம்
வாராமே தவிர்க்கும் விதியானை" — சுந்தரர்.

இன்னோரன்னவாகத் திருமுறைகளில் காணப்படுவன எண்ணிறந்தன. இங்ஙனம் அறநெறியினும், அருள்நெறியினும் உலகியலின் நீங்கி மெய்ந்நெறியைப் பெறுதற்குரிய வழி ஒரு வகையாகவே சொல்லப்படுதலை அறிந்து அவ்வழியில் நின்று அனைவரும் பயன்பெறுவாராக.

# நரி விருத்தம்

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
**திரு. சொ. சிங்காரவேலன் M, A., Dip. Ling.**

**அப்பர் தேவாரத்தில் :**

அப்பர் தேவாரத்தில் 'நரி விருத்தம்' என்ற தொடர் வருகின்றது; அதுபற்றி ஏதும் விளக்கவில்லை அடிகள். 'நாட்டிலுள்ள மாந்தர் நரிவிருத்தம் ஆகுவர்' என்றே பாடுகின்றார்.[1]

"எரிபெருக்குவர் அவ்வெரி யீசனது
உருவ ருக்கம தாவ துணர்கிலார்
அரிஅ யற்கரி யானை யயர்த்துப்போய்
நரிவி ருத்தம தாகுவர் நாடரே"

என்பது அக்குறுந்தொகைப் பாடல். திருவதிகைத் தலத்துப் பாடப்பெற்ற திருநேரிசைப் பதிகம் ஒன்றில்,

"நரிவரால் கவ்வச் சென்று
நற்றசை யிழந்த தொத்த
தெரிவரால் மால்கொள் சிந்தை
தீர்ப்பதோர் சிந்தை செய்வார்"

என்று பாடுகின்றார் அடிகள்.[2] இவ்வரிகளில், முதல் வரியில் கூறப்படும் உவமை நரியின் தொடர்புடையதாகக் காணப் பெறுகின்றது. 'வாயில் நல்லதசையைக் கவ்விக்கொண்ட நரி ஒன்று வரால்மீனைக் கண்டு விரும்பி அதனையும் கவ்வச்சென்று வாய்த்தசையையும் இழந்து, வரால்மீனையும் பெறாததுபோல, மனிதர் சிந்தையுள் மயக்கம் உள்ளது. அம்மயக்க வுணர்வினால் பெற்றதுகொண்டு மனஅமைதி கொள்ளாது, இல்லாததற் கேங்கி இருப்பதையும்இழக்கும் மாந்தர் மால்கொள் சிந்தையைத் தீர்த்து மாசு போக்கத் திருவுளம் பற்றுபவன் இறைவனே' என்று விளக்க வருகின்றார் தாண்டக வேந்தர். முன்னே காட்டப்பெற்ற நரி விருத்தம் இதுதானோ. அன்றி வேறு எதனை அடிகள் திருவுள்ளம்கொண்டாரோ, தெரியவில்லை. இன்னதைத்

தான் அடிகள் திருவுள்ளம் கொண்டார் என்று அறுதியிட்டுரைப்பதற்குத் தக்க சான்றும் இல்லை.

## தத்துவ விளக்கம் :

இவ்வாறு, நரி நீரைக் கடக்கும்போது வராலைக் கண்டு கவ்வச்சென்று தன் வாயிலிருந்த நல்ல தசையை இழந்தமை, உள்ளுயிர்க்குயிராய்த் திகழும் சிவத்தை, பாசப்பற்றினால் இழக்குமாறு குறிக்கும் என்பர் சான்றோர்.[3] சிவபெருமான் உயிர்க்குயிராய் இருந்து அருளும் பெருங்கருணைத்திறம் உடையவன் என்பதைச் சைவசமயப் பனுவல்கள் விரிவாக உரைக்கும்.

" அகத்துறு நோய்க்கு உள்ளினர்அன்றி அதனைச்
சகத்தவரும் காண்பரோ தான் "

என்பர் உமாபதிசிவாசாரியர்.[4]

" ஆரியனும் ஆசான்வந்து அருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும் தோன்றத்
தூரியனும் சிவன் தோன்றும் "

என்பர் அருணந்திசிவாசாரியர்.[5] திருவிசைப்பா ஆசிரியர்களும் இவ்வுண்மையை எடுத்துரைப்பர்.

பாசப்பற்றினால் உயிர்க்குயிராய் விளங்கும் இறைவனை இழப்பது அறியாமையன்றோ? அவ்வறியாமையாகிய 'மால்' நிறைந்த சிந்தனையை மாசுபோக்கி மண்ணுவதும் இறைவனின் பெருங்கருணையே என்பார், இவ்வாறு உவமை வாயிலாக உரைத்தார் ஒருபற்றுமில்லாத திருநாவுக்கரசர்.[6]

" ஒப்பத் தீர்த்திடும் ஒண்கழலாற் கல்லது
எப்பற்றும்மிலன் எந்தை பிரானிரே "

" அப்பற்றல்லது மற் றடிநாயினேன்
எப்பற்றுமிலன் எந்தை பிரானிரே "

என்பது அடிகளது அருள்மொழி. இவ்வாறு இங்கு உரைக்கப்பெறும் நரி பற்றிய குறிப்பையே பின்னால், 'நரி விருத்தம்' ஆகுவர் என்று குறித்தனரோ என்று கொள்ளவும் இடம் உள்ளது.

## திருத்தக்கதேவர் நரி விருத்தம் :

இனி, 'நரிவிருத்தம்' என்றொரு நூல், சைன முனிவரான திருத்தக்கதேவரான் இயற்றப்பெற்று வழங்கிவருகின்றது.[7] திருஞானசம்பந்தர் தேவாரத்துள் கிளிவிருத்தம், எலிவிருத்தம் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.[8] சைன நூலாசிரியர்கள் கிளி, எலி, நரி என்றெல்லாம் நன்கு பழக்கமுற்ற உயிர்களைப் பாத்திரங்களாக வைத்து அவை வாயிலாக அறம் கூறும் சிறு நூல்களை இயற்றி வழங்கினர்; அவற்றுள் ஒன்றே, சிந்தாமணி யாசிரியரால், இயற்றப்பெற்ற நரி விருத்தம் ஆகும். அப்பர் சிந்தாமணியாசிரியர்க்கு முந்தியவராதலின், அப்பரடிகள் குறித்தது, திருத்தக்கதேவர் எழுதிய நரி விருத்தத்திற்கு முந்தியது ஆகிய ஒரு கதையை யாதல்வேண்டும்.

அல்லது தொன்றுதொட்டு வழங்கிய நரிக் கதையைத் திருத்தக்கதேவர் செய்யுள் வடிவிற் பாடினர் என்று கொள்ளுதல் வேண்டும். ஆனால் சைனர்களிடையே வழங்கிவரும் மரபுக்கு மாறுபட்டது ஆகும் அவ்வாறு கொள்வது: "இவரது ஆசிரியர் இவரது திறமையை அறிந்து வைத்தும், இவருள்ளத்தை ஆராய்தற்கு எண்ணிய காலையில், நரி ஒன்று குறுக்கே ஓடிற்று. ஆசிரியர், தேவரின் முகத்தை நோக்கி 'இந்நரியினத்தின் பண்புகளைக் கொண்டு ஓர் சிறுநூல் இயற்றுதிர்' என்று கூற, நரிவிருத்தம் எனப் பெயரிய சிறுநூல்[9] ஒன்றைப்பாடி உடனீந்தனர்" என்று கூறப்பெறும் வரலாறு இங்கு நினைக்கத் தக்கது.

## அப்பர் குறித்த நரிவிருத்தம் எது ?

கி. பி. 10ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சீவகசிந்தாமணி எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று அறிஞர் முடிவுபோக்கியுள்ளமையின், அவர்க்குச் சற்றேறக்குறைய முந்நூறாண்டுகட்கு முன்னே வாழ்ந்த அப்பரடிகள் குறித்தது வேறு நூலையாதல் வேண்டும். அல்லது, நரி வராலைக்கவ் விச்சென்றுவாய்த்தசையையும் இழந்தசெய்தியையே விளக்கிக்கூறும் நூல் ஒன்று இருந்து, அதனையே அங்குக் குறித்தும் இருக்கலாம். எவ்வாறாயினும் அடிகள் காலத்து வழங்கிய சைனச் சிறுகதை ஒன்றை இது சுட்டுவதாகக் கொள்ளலாம். அடிகளும் சைனசமயப் பழக்கமுடையவராதலும், அங்குத் தருமசேனராக இருந்து அறங் கூறியவராதலும் இங்கு நினைக்கத் தக்கனவாம்.

அப்பர் காலத்தும், கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் விருத்தம் என்பது கட்டளைக் கலித்துறையையே குறிக்கும் ஆதலால், திருத்தக்கதேவரது நரிவிருத்தம் அப்பரால் குறிக்கப் பட்டதாகாது என்பதும், கி. பி. 10ம் நூற்றாண்டில் யாப்பருங்கலம் பாடப்பெற்ற காலத்தில் விருத்தம் என்று கூறப்பெறும் பாவகை வேறு பொருள் பெற்றுவந்தது என்பதும், வீரசோழியம் உரையில், கட்டளைக் கலித்துறையில் அமைந்த நரிவிருத்தப் பாடல்கள் காட்டப்பட்டன; இந்தப் பாடல்கள் திருத்தக்க தேவரின் காலத்திற்கு முந்தியவை என்றும், அப்பரடிகளாற் குறிக்கப்பெற்ற நரிவிருத்தம் இதனையேயாகும் என்றும், தாம் எழுதிய சீவகசிந்தாமணி ஆராய்ச்சியின் தொடக்கத்தில் டாக்டர். தா. ஏ. ஞானமூர்த்தி எழுதுவது இங்கே நினைக்கத்தக்கது ஆம்.[10]

நரிபரியாக்குவது என்றால் :

நரியைக் குதிரை செய்யும் நலமும், நரகரைத் தேவு செய்யும் கருணையும் வாய்ந்தவன் கடவுள்.[11] சிற்றுயிர் தன் வேட்கைகளாலும் பொல்லாங்குகளாலும் நரிபோன்று உள்ளது. அதன் சிறுமைகள், கயமைகள், வீண் ஆடைகள் அனைத்தையும் போக்கிப் பரிபோன்று ஆக்கி அருள்பவன் இறைவன் என்பதே நரியைக் குதிரை செய்யும் நலம். கல்லைப் பிசைந்து கனியாக்குதல் என்று மணிவாசகர் கூறுவது போன்றதே இதுவும்;[12] ஆதலின் 'நரியைக் குதிரை செய்வானும்' என்ற அப்பர் அருள் வாக்கிற்கும் மணிவாசகர் வாழ்வுக்கும் தொடர்பு கொள்ளுதலினும் இப்பொருள் கொள்ளுவதும் பொருந்தும்.

நரிவிருத்தம் என்று நாவுக்கரசர் நவின்ற நற்றமிழ்த் தொடர் இவ்வாறெல்லாம் நம் சிந்தையினைத் தூண்டி வாழ்வித்து இன்பூட்டுகின்றது.

---

அடிக்குறிப்பு விளக்கம் :


1. அப்பர் தேவாரம் - பா. 2082.
2. ,, பா. 273.
3. திருநாவுக்கரசு நாயனார் தேவாரப் பதிகங்கள் - நான்காம் திருமுறை - தருமையாதீனப்பதிப்பு - பா. 273 உரைப்பகுதி காண்க.
4. திருவருட்பயன் - 42.
5. சிவஞானசித்தியார் - 279.

ஆவுடையார்கோயில் திருப்பணி விழாவை
திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
திருமுன்னர்



தமிழக அரசு, அறநிலைய அமைச்சர்,
மாண்புமிகு. திரு. K. V. சுப்பையா அவர்கள் துவங்கிவைத்தல்
28—4—69

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்
திருமுலைப்பால் விழாவில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்
தரிசனம் செய்தல்

காரைக்கால் - தருமபுரம் ஸ்ரீ யாழ்மூரிநாதசுவாமி தேவஸ்தானம்
மகா கும்பாபிஷேகம்



யாகசாலையிலிருந்து கடம் எழுந்தருளியாதல்

திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்
சனிப்பெயர்ச்சியன்று (27—4—69)



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களும்
பாண்டிச்சேரி லெப்டினெண்ட் கவர்னர்,
கனம். திரு. ஜெட்டி அவர்களும்

6. அப்பர் தேவாரம் - பா, 2022; 2024.

7. சிவகசிந்தாமணி - சமாசப் பதிப்பின் (1941) பிற்சேர்க்கை காண்க.

8. "கூட்டினர் கிளியின் விருத்தம் உரைத்ததோர் செவியின் தொழிற் பாட்டு மெய்சொலிப் பக்கமே செலும் எக்கர் தங்களைப் பல்லறம்"

— திருஞானசம்பந்தர் தேவாரம் - பதிகம் 297 பா. 5.

9. நரிவிருத்தம் நூலிற் கூறப்பெற்றுள்ள கதைச்சுருக்கம் இது:- காட்டில் வேடன் ஒருவன் யானையைக் கொல்ல ஓர் அம்பை எய்து, மற்றோர் அம்பை வில்லில் பூட்டிவைத்துக் கொண்டிருந்தான். அப்போது பாம்பு ஒன்று அவ்வேடனைக் கடித்துவிட்டது. தன்னைக் கடித்த பாம்பை வாளால் வெட்டிக் கொன்று தானும் மயங்கி விழுந்து இறந்தான் வேடன். ஒரே நேரத்தில் யானையும் பாம்பும் இறந்தன. வேடனும் இறந்தான். அவ்வழியே வந்த நரி ஒன்று, மகிழ்ச்சி மிகக்கொண்டு, 'ஆறு திங்கட்கு யானையின் தசை உணவு ஆகும்; ஏழு நாட்களுக்கு வேடனின் உடல் உணவு ஆகும்; ஒரு நாளுக்குப் பாம்பின் உடல் உணவு ஆகும். இப்போது நம் பசிக்கு இவ்வேடன் கையிலுள்ள வில்லின் நரம்பு ஆகிய நாணைக் கடித்துச் சுவைப்போம்' என்று கருதிக்கொண்டு வில்லில் பூட்டியிருந்த நாணை ஆவலுடன் கடித்தது. நாணறுந்த வில் நிமிர்ந்த வேகத்தில் நரியின் வாயைக் கிழித்தது; நரியும் இறந்தது.

இந்த வரலாறே திருத்தக்கதேவரது நரிவிருத்தத்திற் கூறப்பட்டிருக்கின்றது. ஐம்பத்தொரு பாடல் கொண்ட இச் சிறுநூல் காப்புச் செய்யுளுடன்கூடியது. இவ்வரலாற்றையடிப்படையாக வைத்து அறவுரை பல கூறி முடிகின்றது இச் சிறுநூல்.

"ஆக்குவ தேதெனில் அறத்தை யாக்குவ
போக்குவ தேதெனில் வெகுளி போக்குவ
நோக்குவ தேதெனில் ஞான நோக்குவ
காக்குவ தேதெனில் விரதம் காப்பவே"

என்பது இதன்கண் அமைந்த ஒரு பாடல்.

10. Dr. T. A. Gnanamurthy, M. A. Ph. D. - "A Critical Study of Civaka Cintamani" PP. 14 - 15.

11. அப்பர்தேவாரம்-ப. 33 (திருவாரூர்; பண் காந்தாரம்)

12. திருவாசகம் பா. 170 - (திருவம்மானை - 5)

# சேக்கிழார்

திருமுறைக்கலைஞர்,
வித்துவான், திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்

## குன்றத்தூர் - வேளாளர் பெருமை

"தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து" என்று புகழ்ந்து கூறும் நாடு தொண்டை நாடு. இது முன்னர் 24 - கோட்டம், 79 - வளநாடு, 1900 - ஊர்கள் கொண்டதாகப் பிரிக்கப்பெற்று விளங்கியது. இவற்றுள் புலியூர்கோட்டம் என்பது ஒன்று; அதனைச் சார்ந்தது குன்றத்தூர் வளநாடு. அதன் தலைமையாகத் திகழ்ந்த ஊர் குன்றத்தூர். இங்குப் பெருவளத்தான் என்னும் கரிகாற்சோழனால் 12000 சைவ வேளாளர் கோத்திரங்களைக்கொண்ட 48000 - சைவ வேளாளர் குடியில் வந்த சிலர் குடியேற்றப்பட்டு வாழ்ந்து வந்தனர். அவர்களில் நிலவுரிமை பெற்று வாழ்ந்து வந்தவர் கிழார் என்று அழைக்கப்பெற்றனர். அவர்களுள் கூடற்கிழார், புரிசைக்கிழார், வெண்குளப்பாக்கிழார், சேக்கிழார் முதலிய குடிகளே சிறப்புவாய்ந்த முதன்மைக் குடிகளாம். இக்குடியினர் அறிவு, ஒழுக்கம், வாய்மை, அன்பு, ஈகை, பக்தி முதலிய பண்பாடுகளில் மேன்மை பெற்றவர் ஆவர்.

## சேக்கிழார் பிறப்பு

இத்தகைய சிறப்புற்ற சைவ வேளாளர் மரபில் சேக்கிழார் குடியில் தோன்றியவர் வெள்ளியங்கிரி முதலியார் என்பவர். அவர் தொண்டைநாட்டு மன்னர் அவையில் புலவராய்த் திகழ்ந்தவர்; அழகாம்பிகை என்னும் அம்மை நல்லாளோடு இல்லறவாழ்க்கையினை இனிது நடத்திவந்தவர். இவ்விருவரும் செய்த அருந் தவப்பயனாய்ச் சைவ நன்னெறி தழைத்தோங்க ஓர் நன்னாளில் ஆண்குழந்தை பிறந்தது. அதற்குப் பெற்றோர்கள் அருண்மொழித் தேவர் என்னும் திருப்பெயர் சூட்டிச் சிறப்பித்தனர். அன்றியும் அக்குழந்தைக்கு இராமதேவர் என்ற பிள்ளைப்பெயர் ஒன்று உண்டு எனத் திருமழபாடியிலுள்ள ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. பெரும்பாலும் குழந்தை சேக்கிழார் என்ற குடிப்பெயராலேயே அழைக்கப்பெற்று வந்தது.

## பெயர்களின் விளக்கம்

சேக்கிழார் என்ற குடிப்பெயர் சேவூர்க்கிழார் அல்லது சேயூர் (செய்யூர்)க் கிழார் என்பதன் மரூஉப் பெயர் என்பர். (சேவூர் - இது வடார்க்காட்டைச் சேர்ந்த ஆரணி (ஆறணி) ஜாகீரை அடுத்த ஊர். சேயூர் - இது செங்கற்பட்டைச் சேர்ந்த சூணம் பேட்டை அடுத்த ஓர் ஊர்). சேக்கிழாருக்கு அருண்மொழித் தேவர் என்ற பெயர் சிறப்புப் பெயர் என உமாபதிசிவாசாரியர் கூறுவர். சேக்கிழாரது தெய்வ வாக்குப்பற்றி எழுந்த பெயர் அருண்மொழித்தேவர் என்பது எனச் சில அறிஞர் புகல்வர். அருண்மொழித்தேவர் என்ற பெயர் முதல் இராசராசசோழனுக்குப் பெற்றோர் இட்டு வழங்கிய பெயர் எனச் சோழர்வரலாறு கூறும். தமது அரசனிடத்துப் பேரன்புள்ள குடிமக்கள் தம் மக்களுக்கு அவ்வரசனின் பெயரை இட்டுவழங்குதல் மரபு. ஆகவே, தென்னாட்டைச் சிவன் உறையும் நன்னாடாகச் செய்து, சிவ பக்தியில் சிறந்து விளங்கி ஆட்சிபுரிந்த முதல் இராசராச சோழனின் (கி. பி. 985 - 1014) பிள்ளைத் திருநாமமாகிய அருண்மொழித்தேவர் என்ற பெயரினைச் சேக்கிழாருக்கு அவரது பெற்றோர் இராசபக்தியினால் சூட்டி வழங்கினர் என்பர். அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான நரசிங்கமுனையரையர் என்ற சிவனடியாரும், திருவிசைப்பா பாடிய ஒன்பதின்மரில் ஒருவரான புருஷோத்தமநம்பி என்ற சிவனடியாரும் திருமால் பெயர்களைத் தம் பெயர்களாகக்கொண்டிருந்தாலும் அவர்கள் சைவ சமய அடியார்களே ஆவர். அதுபோலவே நம் சேக்கிழாருக்கும் அவரது பெற்றோர் சமயவேறுபாடு கருதாமல் இராம தேவர் என்ற பெயரை இட்டு வழங்கி இருப்பர் என்பர். அன்றியும் இராமேச்சரத்தில் தசரதராமன் பூசித்த சிவலிங்கம் இராமலிங்கம் என்றும், இராமநாதன் என்றும் இராமதேவர் என்றும் பெயர் பெற்றுள்ளது. ஆகவே சேக்கிழாருக்கு இராமதேவர் என்று அமைத்த பெயர் சிவபெருமான் திருப்பெயரே என்பதில் சிறிதும் ஐயமில்லையாம்.

## சேக்கிழாரின் சகோதரர்

வெள்ளியங்கிரி முதலியாருக்கு மற்றொரு ஆண்மகவு பிறந்தது. அதற்குப் பாலருவாயர் எனப் பெயரிட்டு அழைத்தனர். பாலருவாயர் என்ற பெயர் சீகாழியில் சிவஞான அமுது உண்டருளிய திருஞானசம்பந்தரின் திருப்பெயர்களில் ஒன்று ஆகும். பாலருவாயர் சேக்கிழாரின் தம்பி ஆவர்.

## கல்விச் சிறப்பு

சேக்கிழார் உரிய காலத்தே தமிழ் நெடுங்கணக்கைப் பயின்ருர்; இலக்கணம், தருக்கம், நிகண்டு முதலிய கருவி நூல்களையும், நீதிநூல்களையும், சங்க இலக்கியங்களையும், வேறு பல நூல்களையும் செவ்வனே தந்தையார்பால் ஆராய்ந்து அறிந்தார்; சைவ சமயத்திற்குரிய சைவ சித்தாந்த சாஸ்திரங்களையும், தேவார திருவாசகம் முதலிய திருமுறைகளையும், சைவ சமயவொழுக்க நூல்களையும் ஐயந்திரிபற ஓதி உணர்ந்தார்; கவிபாடும் அருட்புலமையும் வாய்க்கப்பெற்ருர். கற்றலும், கேட்டதன்கண் நிற்றலும் பெற்ற சேக்கிழார் சைவநன்னெறியில் நின்று அன்பு, அடக்கம், வாய்மை முதலிய நற்பண்புகளைப் பெற்றதோடு அன்றிச் சிவபக்தியிலும், சிவனடியார் பக்தியிலும் சிறந்து விளங்கினர். பாலருவாயரும் சேக்கிழாரைப்போலவே கல்வி அறிவு, ஒழுக்கம் முதலியவற்றிலும் சைவசமயத் துறையிலும், ஆட்சித்துறைக்கு வேண்டிய பல பயிற்சியிலும் சிறந்து திகழ்ந்தார்.

## சேக்கிழாரின் அமைச்சர்பதவி :

அக்காலத்தே சோழநாட்டை ஆட்சி புரிந்த அநபாய சோழன் சேக்கிழாரின் கல்வித்திறன், நற்குணம், நற்செய்கை முதலியவற்றைத் தூதர்கள் மூலம் கேள்விப்பட்டுத் நமது இராச சமூகத்திற்கு அவரை அழைப்பித்தான். அரசனது அழைப்பிற் கிணங்கிய சேக்கிழாரும் வந்து அரசனைக்கண்டார். அநபாய சோழன் சேக்கிழாரின் அறிவுத்திறன் முதலியவற்றைப் பலவாறு ஆராய்ந்து அறிந்து வியப்புற்று அவருக்கு முதல் அமைச்சர் பதவியை அளித்தான். சேக்கிழார் அமைச்சர் பதவியை அன்புடன் ஏற்றுத் தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திற்கு அண்மையிலுள்ள திருநாகேச்சுரம் என்னும் சிவத்தலத்தைத் தனக்கு இருப்பிடமாக அமைத்துக்கொண்டு அமைச்சுத் தொழிலை நடத்தி வந்தார். அப்போது சேக்கிழார் அறநூல் வழியிலே நின்று குடிமக்களைப் பாதுகாத்தலும், அரசாங்க அலுவலை உடனுக்குடன் கவனித்து வருதலும், போர்வந்துழி பகைவர்க்குத் துணையானவரை அப்பகைவரினின்றும் பிரித்தலும், தம் படையிலுள்ளாரை இன்சொல், கொடை முதலியவற்ருல் ஆதரித்துப் பிரியாது பாதுகாத்தலும், தம்மிடமிருந்து வேறுபட்டுப் பிரிந்தவர்களை மீண்டும் சேர்த்துக்கொள்ளுதலும், நாட்டின் நன்மைக்கான பல நற்செயல்களைச் செய்து வருதலுமாகிய பலவற்றைச்செய்து நாட்டு மக்கள் போற்ற நல்லமைச்சராய் விளங்கினர்.

அநபாயசோழன் சேக்கிழாரின் நாடாட்சித்திறனையும் தம் குடிமக்கள்மீது வைத்துள்ள அன்பின் செயலையும் கண்டு அவருக்கு உத்தமசோழ பல்லவன் என்ற பட்டம் அளித்து வரிசை பல வழங்கிச் சிறப்பித்தான்.

## சேக்கிழாரின் கடவுள் பக்தி:

சேக்கிழார் திருநாகேச்சுரத்தில் எழுந்தருளிய சிவபெருமானிடத்து நீங்காத பேரன்பு பூண்டு ஒழுகினர்; திருநாகேச்சுரர் மீது கொண்ட பக்தி காரணமாகத் தம் பிறப்பிடமாகிய குன்றத்தூரிலே ஊர்க்குக் கீழ்க்கோடியில் ஒரு சிவாலயம் எடுப்பித்து அதற்குத் திருநாகேச்சுரம் எனப் பெயரிட்டார். குன்றத்தூர் திருநாகேச்சுரப் பெருமானுக்கு நித்திய பூசையும் விசேட கால பூசையும், திருவிழாவும் நடைபெறும் பொருட்டு அதற்காக வேண்டும் பொருள்களையும், நிலங்களையும் வழங்கினர். இவர் எடுப்பித்த சிவாலயமும் மடவளாகமும் இன்றும் நின்று பிறை மதிபோல் வளர்ந்து விளங்குகிறது.

## சேக்கிழார் அபயனுக்குச் சிவகதைகளை அறிவித்தல்:

உத்தமசோழபல்லவரான சேக்கிழார் அமைச்சுத் தொழில் புரிந்துவரும் நாளில் சோழநாட்டில் சமண்சமயம் மிக்கோங்கி நின்றது. அப்பொழுது அநபாயசோழன் பல புலவர்களோடு இருந்து தனது காலத்தை இலக்கியச்சுவையில் ஈடுபடுத்தி வந்தான். அரசன் சைவ சமயத்தைச் சார்ந்தவனாய் இருந்தும் சீவகசிந்தாமணி முதலிய சமண காவியங்களின் சுவையில் திளைத்து நின்றான். அதுகண்ட சேக்கிழார் சமயம் அறிந்து தம் அரசனிடம் சென்று, "அரசே! தாங்கள் இப்பொழுது அனுபவித்து வரும் சமண காவிய இன்பம் இம்மைக்கும் மறுமைக்கும் பயன் அளிக்காது; நெல் இருக்க உமியைக் குற்றிக் கை வருந்துபவர்போல ஆகும்; ஆதலால் இம்மை மறுமைப் பயனைத் தரவல்ல சிவ கதைகள் பல உள்ளன" என்று சிவனடியார்களின் சிறப்புக்களையும் அவர்களது செயற்கரிய செயல்களையும் அவர்களுக்கு இறைவன் திருவருள் பாலித்ததையும் பற்றித் தெளிவாக எடுத்துக்கூறினர். அது கேட்டு அரசன் அகமிக மகிழ்ந்து, "சிவனடியார்கள் வரலாறு அனைத்தையும் திரட்டி ஒரு நூலாக அமைத்துத் தருக" என்று சேக்கிழாரை வேண்டிக் கொண்டான். அரசனின் விருப்பிற்கிணங்கிய சேக்கிழார் தாம் இருந்து சிவனடியார்களின் புராணம் இயற்றச் சிதம்பரத் திருத்தலமே ஏற்ற இடம் என்று கருதி, அதனை அரசனுக்குத் தெரிவித்தார். அரசனும் அதற்கு உடன்பட்டுப் பெரும் பொருள் அளித்துச் சிதம்பரம் செல்லுமாறு பணித்தான்.

**சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடுதல்:**

ஒரு நன்னாளில் சேக்கிழார் தம் பரிசனங்களுடன் தில்லையம் பதிக்குச் சென்று பொன்னம்பலத்தில் ஆனந்ததாண்டவம் புரியும் நடராசப்பெருமானைத் தரிசித்து வழிபட்டு வணங்கி நின்று, "அம்பலத்தாடும் அரசே! உமது அடியார்களின் வரலாற்றுச் சிறப்பினை ஒரு பெரிய நூலாக இயற்றுவதற்கு முன்னர் அடியெடுத்துக் கொடுத்தருள வேண்டும்" என்று வேண்டினார். அப்பொழுது நடராசப்பெருமான் தில்லைவாழந் தணர்கள் முதலிய யாவரும் கேட்க வானிடத்தே, 'உலகெலாம்' என்னும் திருவாக்கை அசரீரியாக எடுத்து மொழிந்தருளினார். அதனையே சேக்கிழார் முதல் சீராகக்கொண்டு சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்தில் (இராசசபை மண்டபத்தில்) இருந்து சித்திரை மாதம் திருவாதிரை நன்னாளில் சைவ நாயன்மார்கள் வரலாற்றை மிக விரிவாகப் பக்திச்சுவை நனி சொட்டச்சொட்ட விருத்தப்பாவால், திருத்தொண்டர்புராணம் என்னும் பெயருடன் பாடத் தொடங்கி, ஓராண்டளவிலே (அதாவது மறு சித்திரை மாதம் திருவாதிரை நாளிலே) நூலை இனிது முடித்தார்.

**சேக்கிழார் தாம் பாடிய நூலுக்கு ஆதரவான நூல்கள்:**

சேக்கிழார் தாம் பாடும் திருத்தொண்டர் புராணத்திற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவனடியார்களைப்பற்றித் தொடர்ந்து பாடியருளிய "திருத்தொண்ட தொகை" என்னும் திருப்பதிகத் தினையும், சிதம்பரத் தலத்திற்கு மேற்கே உள்ள திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் திருவருளைப் பெற்ற நம்பியாண்டார் நம்பிகள் என்ற சிவவேதியர் சிவனடியார்களைப்பற்றி வகுத்துப் பாடியருளிய, "திருத்தொண்டர் திருவந்தாதி" என்னும் பிரபந்தத் தினையும், மூவர் தேவாரத் திருமுறைகள் முதலியவற்றில் கிடைக்கும் வரலாற்றையும், முதியோர்கள் பலரிடம் விசாரித்து அறிந்த வரலாற்றையும் பெருந்துணையாகக் கைக்கொண்டார்; இவ்வாதரவுகளைக் கொண்டே விரிவாகத் திருத்தொண்டர் புராணத்தைப் பாடிமுடித்தார்.

**திருத்தொண்டர் புராணத்தின் உட்பிரிவு**

இத் திருத்தொண்டர்புராணம் என்னும் நூல் பலவகை மரபுகளில் தோன்றிப் பயன் கருதாது பேரன்புடன் குருலிங்க சங்கம வழிபாட்டில் நின்று செயற்கரிய செயல்களைச் செய்து இறைவன் திருவருள் பெற்ற தனி அடியார் அறுபத்துமூவர்-

தொகையடியார் ஒன்பதின்மர் ஆகிய எழுபத்திரண்டு சிவனடியார்களின் வரலாறுகளைத் தன்னகத்தேகொண்டு இரண்டு காண்டங்களாகவும், பதின்மூன்று சருக்கங்களாகவும் பிரிந்து 4253 - செய்யுட்களைப் பெற்றுத் திகழ்வது. தற்போது இச் செய்யுட்களுடன் 33 செய்யுட்கள் வெள்ளிப்பாடல்கள் எனச் சேர்ந்து 4286 என்ற எண்ணிக்கையில் இருந்து வருகிறது.

## திருத்தொண்டர்புராண அரங்கேற்றம்:

திருத்தொண்டர்புராணம் இனிது முடிவுற்ற செய்தியை அரசன் அநபாயன் அறிந்தான்; உடனே தன் பரிசனங்கள் புடைசூழத் தில்லையம்பதியினை அடைந்தான். சேக்கிழார் அரசனை எதிர்கொண்டு வணங்கி வரவேற்று நூல் செவ்வனே நிறைவேறிய செய்தியினை அறிவித்தார். அரசன் ஆனந்த பரவசம் அடைந்து நூலை அரங்கேற்றம் செய்யுமாறு கூறினன். ஒரு நன்னுளில் பொன்னம்பலவன் சந்நிதியிலே அநபாய சோழனும் சைவமடாதிபதிகளும் புலவர்களும், சைவப் பேரன்பர் களும் கூடிய பேரவையில் சேக்கிழார் தாம் பாடியருளிய திருத் தொண்டர் புராணத்தை அரங்கேற்றம் செய்து முடித்தார். பின்னர் அநபாய சோழன் சேக்கிழார்பெருமானையும் திருத் தொண்டர் புராணத்தையும் யானைமீது ஏற்றித் தானும் சேக்கிழாருக்குப்பின் இருந்து கவரி விசிக்கொண்டு சிவமே நிலவும் திருவீதி வலம் செய்வித்தான்; அதன் பிறகு நடராசப் பெருமான் திருமுன்னர் திருத்தொண்டர் புராணத்தைக் கொணர்ந்து திருக்களிற்றுப்படி (பஞ்சாட்சரப்படி) மேல் வைத்துப் போற்றிச் சேக்கிழார் பெருமானுக்குத் "தொண்டர்சீர் பரவுவார்" என்ற சிறப்புப் பட்டம் ஒன்றை அளித்து வரிசைகள் பல வழங்கி ஆதரித்தான்.

## பாலருவாயர் மந்திரிபதவி ஏற்றல்:

பின்பு சேக்கிழார்பெருமான் சிவத்தொண்டு சிவனடியார் வழிபாடு முதலியவற்றைச் செய்யவும், அன்பர்களுக்குத் திருத் தொண்டர் புராணத்தை எடுத்து மொழியவும் தன்னுட் கொண்டு, தாம் தில்லையம்பதியிலேயே தங்கி இருக்கும் கருத்தை அரசனுக்கு அறிவிக்க, அரசனும் அவ்வாறே செய்யுமாறு பணித்து வசதிகள் பலசெய்துவைத்தான்; சேக்கிழார் பதவிக்குப் பதிலாக அவரது தம்பியாகிய பாலருவாயரை அழைப்பித்து அவருக்குத் 'தொண்டை மான்' என்ற பட்டம் அளித்துத் தனது மந்திரியாக நியமித்துக்கொண்டான். பாலருவாயர் அநபாய

சோழன் தமக்களித்த பதவியைப்பெற்றுத் தம்து குன்றத்தூரில் இருந்தபடியே ஆட்சிசெய்து வந்தார். அதனால் அவர் 'தொன்டை மண்டலம் நின்றுகாத்த பெருமான்' எனப் பெயர் பெறலானர். பாலறுவாயர் குன்றத்தூரில் தம்பெயராலே பாலறுவாய குளம் என்ற ஒரு குளம் வெட்டினர். தற்போது அக்குளம் 'பல்லவராயர் கேணி' என மருவி வழங்குகிறது.

சேக்கிழார் செய்ந்நன்றி மறவாத சீலர் :

கம்பர் தம்மை ஆதரித்த வெண்ணெய்நல்லூர் - சடையப்ப முதலியார் என்ற வள்ளலை இராமாயணத்தில் பல இடங்களிலும், வில்லிபுத்தூராழ்வார் தம்மை ஆதரித்த வக்கபாகைவரபதியாட்கொண்டான் என்ற அரசனைப் பாரதத்தில் பல இடங்களிலும் அமைத்துப் புகழ்ந்து கூறியதுபோலவே, சேக்கிழார் பெருமானும் தம்மை ஆதரித்துச் சிறப்பித்த அநபாய சோழனைத் திருத்தொண்டர் புராணத்தில் பல இடங்களில் வைத்துப் புகழ்ந்து போற்றியுள்ளார். ஆகவே சேக்கிழார் செய்ந்நன்றி மறவாத சீலர் என்பதை அறியலாம்.

கல்வெட்டில் சேக்கிழார் சிறப்பு :

கண்டராதித்த சோழன் (கி. பி 950-957) மனைவி செம்பியன் மாதேவியார் சிவபக்தியில் சிறந்துவிளங்கியதால் 'மாதேவடிகளார்' (மாதேவர்க்குச் சிறந்த அடியார்) என்ற சிறப்புப் பெயர் பெற்றது போலவே, சேக்கிழார் பெருமானுக்கும் சிவபக்தியில் மிகச் சிறந்து நின்றதைக் குறிப்பிட மாதேவடிகள் என்ற ஒரு சிறப்புப் பெயர் கல்வெட்டு ஒன்றில் காணப்படுகிறது. அது,

"ஜெயங்கொண்ட சோழமண்டலத்துக் குலோத்துங்க சோழவளநாடான புலியூர் கோட்டத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர் சேக்கிழான் மாதேவடிகள் ராமதேவனை உத்தம சோழப்பல்லவராயன்" என்பது திருமழபாடி திருக்கோயிலில் உள்ள கல்வெட்டு.

மாதேவடிகள் என்ற பெயர் வழங்கியதைக் "குன்றைமுனி சேக்கிழார்" (84) எனவும், "அண்டவாணர் அடியார்கள் தம்முடன் அருந்தவத்தில் இருந்து" (100) எனவும் வரும் சேக்கிழார் புராணமும் வலியுறுத்துகிறது.

## திருத்தொண்டர் புராணச்சிறப்பு

திருத்தொண்டர் புராணம் சைவ சமயத்தொடர்பான நூலாக இருப்பினும் இலக்கண அமைதி தவறுமல் சொல்நயமும் பொருள் நயமும், கவி நயமும் பெற்று இனிய செந்தமிழ் நடையில் திகழ்வது; இரும்புக் கடலைபோன்ற செய்யுட்களாக இல்லாமல் கதலிபாகமாய்ப் படிக்கப் படிக்கத் தெய்வமணம் வீசுவது; மூவர் திருமுறைகள், சைவசித்தாந்த சாஸ்திரங்கள், சங்க இலக்கியங்கள், திருக்குறள் முதலிய நீதிநூல்கள் முதலியவற்றின் அருங் கருத்துக்களைத் தன்னகத்தேகொண்டு விளங்குவது; படிக்குந் தோறும் படிக்குந்தோறும் புதிய புதிய இன்பம் தோன்றிப் பக்திச் சுவையினையும், அறிவுப் பெருக்கத்தினையும் உண்டு பண்ணுவது; அன்போடு படிப்போர்க்கு இறைவனுடைய திருவருளைக் கூட்டிநிற்பது; திருவிளையாடற்புராணம்போன்று கயிறு சாத்தி எண்ணியவற்றின் உண்மைகாணும் உயர்வுடைய தெய்வநூலாகக் கருதுவது.

நடராசப்பெருமான் வானில் இருந்து அசரீரியாக வழங்கியருளிய 'உலகெலாம்' என்ற திருவாக்கினைச் சேக்கிழார் தாம் பாடிய திருத்தொண்டர்புராணத்தில் முதல் இடை கடை என்ற பகுதிகளில் முறையே அமைந்துள்ள,

1. " உலகெலாம் உணர்ந்(து) ஓதற் கரியவன்
   ... ... ... ... ... ... ... ... ...
   மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம் ". —பாயிரம் 1.

2. " சோதி முத்தின் சிவிகை ... ... ...
   ... ... ... ... .. அஞ்செழுத்(து)
   ஓதி ஏறினர் உய்ய உலகெலாம் ".
   — திருஞானசம்பந்தர்புராணம் 216.

3. " என்றும் இன்பம் ... ... ... ...
   ... ... ... ... ... ... ... ...
   நின்ற தெங்கும் நிலவி உலகெலாம் "
   — வெள்ளையானைச்சருக்கம் - 53.

இம்மூன்று தெய்வத்தன்மை பொருந்திய செய்யுட்களும் திருத்தொண்டர்புராணத்திற்கு மூன்று உயிர்நாடிகளாகத் திகழ்கின்றன எனப் பெரியோர் கூறுவர்.

திருத்தொண்டர்புராணத்தில் மிக ஈடுபாடுற்ற பிற்காலத்தவர் பாயிரத்தில் வரும், " எடுக்கும் மாக்கதை " (மா - பெரிய.

கதை - புராணம்) என்னும் திருப்பாட்டை நோக்கித் திருத்தொண்டர்புராணத்திற்குப் பெரியபுராணம் என்ற ஒரு பெயரினையும், வழங்கலாயினர். பெரியர் + புராணம் = பெரியபுராணம் என்றலுமாம். பெரியர் - செயற்கரிய செயல்களைச்செய்து அருள் பெற்ற சிவனடியார்கள், புராணம் - புராதன வரலாறு.

### சேக்கிழார் இறுதிக்காலம்

சேக்கிழார்பெருமான் இறுதிக் காலத்தில் துறவுநிலை கொண்டு இடையருத சிவத்தியானத்தில் நின்று ஒரு வைகாசி மாதம் பூச நன்னுவில் பொன்னம்பலவன் திருவடி நிழலை அடைந்தருளினுர்.

### சேக்கிழாரின் ஆலயம்

சேக்கிழார் சுவாமிகள் சமாதி சிறந்த கோயிலாகச் சிதம்பரம் ஞானப்ரகாசக்குளத்தின் வடகரையில் உள்ளது. பூசை நடைபெறுகிறது. தற்போது குன்றத்தூரில் சேக்கிழார் சுவாமிகளின் வீடு இருந்த இடத்திலேயே அவரது ஆலயம் ஒரு சிறு கோயிலாக இருந்துவருகிறது.

### சேக்கிழார் கண்ட ஆராய்ச்சி

இரண்டாம் குலோத்துங்கசோழன் என்பவன் தில்லைப் பேரம்பலத்தில் பொன் வேய்ந்தமையால் "பேரம்பலம் பொன் வேய்ந்தசோழன்" எனப்பட்டான். (பேரம்பலம் - இது சிதம்பரம் ஆலயத்துள் சோமாஸ்கந்தமூர்த்தி முதலிய உற்சவமூர்த்திகள் எழுந்தருளிய இடம்.) இச்சோழன் தில்லை - பேரம்பலத்தில் பொன்வேய்ந்த செயலைச் சேக்கிழார் தம் திருத்தொண்டர் புராணம் - பாயிரம் - 8 ஆம் செய்யுளில், சேயவன் திருப் பேரம்பலம் செய்ய, தூய பொன்னணி சோழன் நீடூழிபார் ஆயசீர் அநபாயன் அரசவை" என்று குறிப்பிடுகிறுர். இச் சோழனுக்குச் சிறப்பாக உரிய விருதுப்பெயர்கள் பலவாம். அவற்றுள் திருநீற்றுச்சோழன், அநபாயன் என்பன முக்கியமானவை. இந்த அநபாய சோழமன்னனின் ஆட்சிக்காலம் கி. பி. 1133 முதல் 1146 வரை ஆகும். ஆகவே இந்த அநபாயசோழன் என்ற இரண்டாம் குலோத்துங்கசோழன் காலத்திலே விளங்கியவர் சேக்கிழார் பெருமான் ஆதலின் இவரது காலமும் கி. பி. 12 - ஆம் நூற்றுண்டின் முற்பகுதியே ஆகும்.

# “ கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் ”

வித்துவான். திருமதி. ப. நீலா

( மலர் 28, இதழ் 4, பக்கம் 210 இன் தொடர்ச்சி )

## (17) மாணிக்கம் விற்றது.

உக்கிர வழுதியின் மகனாகிய வீரபாண்டியன் நல்லாட்சி புரிந்து வரும் நாளில் ஐம்போகமும் விளையும் நிலமனைய நல்லார் பலர் (காமக்கிழத்தியர்) பல பிள்ளைகளைப் பயிருக்குக் களை போலப் பெற்றனர். இவர்களால் மனநிறைவெய்தாத வீர பாண்டியன் பட்டத்துத் தேவியின் திருவயிற்றில் குமரன் தோன்ற வேண்டுமெனத் தனிமுதலாம் சிவனைக் கருதி நோன் பிருந்தான். கயற்கண்ணி மணாளனுக்குரிய அட்டமி - சதுர்த்தசி - சோமவார நோன்புகளை ஏற்றதனால் உரிய காலத்தில் அரசமா தேவி ஆண்மகவொன்றை ஈன்றெடுத்தாள்.

**வினைவலியால் புலிபற்றியது :**

இளங்குமரனுக்குச் சாதகவினை முதல் பலவும் செய்து பொலிவு பெற்றுச் சிறந்த நாளிலே வேட்டை மேற்சென்ற வீரபாண்டியனைப் புலி பற்றிக்கொன்றது. வேங்கை வாய்ப் பட்டு வேந்தன் விண்விருந்தானான் என்ற செய்தியால் தேவி மார்கள் சித்தங் கலங்கினர். காமக்கிழத்தியர் பெற்ற பிள்ளை கள் இதுதான் சமயமென்றெண்ணி விலைமதிக்கவொண்ணாப் பொன்முடி முதலிய பொருள்களையும் நவமணிகளையும், தானை களையும் பற்றிக்கொண்டு ஓடி ஒளிந்தனர்.

மற்றவேலைகா மக்கிழத் தியர்பெறு மைந்தர்
அற்றநோக்கியீ தமையமென் றுனைமா வாதி
உற்றபல்பிற பொருணிதி யொண்கல னோடுங்
கொற்றமோலியுங் கவர்ந்தனர் கொண்டுபோய் மறைந்தார்.

**மறை தந்தவன் மாணிக்கம் விற்ருன் :**

இளம் புதல்வனைக்கொண்டு, மறைந்த மன்னனின் சடங்குகளைச் செய்தபின்பு, அவனுக்கு முடிசூட்ட எண்ணினர் அமைச்சர் முதலியோர். பொன்னறை திறந்து நவமணி மகுடந் தேடிக் காணுது திகைத்தனர். வேறென்று செய்ய மணிகளும் இல்லை. மகுடமில்லாமல் மன்னன் எப்படி இருப்பது! மன்னனில்லாமல் மண்ணுலகக் காவல் எப்படி அமைவது! கவலை தோய்ந்த முகத்தினராய் அரசிளங் கொழுந்தையும் அணைத்துக் கொண்டு ஆலந்தரித்த மூலலிங்கத்திடம் முறையிட வந்தார்கள்.

விளங்கும் தூய ஆடையை அரையிலணிந்து மாணிக்கப் பொதியைத் தலையில் சுமந்து, தோள்களில் மின்னும் வாகு வலயம் பூண்டு, மந்திரப் புரிநூல் மார்பில் ஒளிவீச, சுந்தரக் குழைகள் புயங்களில் புரண்டாட, தென்னவர் குலப் பெருந் தெய்வமாகிய மன்னவர், வணிகராய் வந்து தோன்றினர். அமைச்சர்களை நெருங்கிக் கவலையின் காரணங் கேட்டார். நடந்ததை நடந்தபடி நவின்ற அவர்களை, 'அஞ்சற்க' என்றுகூறி, 'என்னிடம் விலையிடமுடியாத நவமணிகளும் உண்டு. அவற்றை உங்கட்குக் காட்டுவேன், கவலற்க' என்று தேறுதல் கூறி கிழ்த்திசை நோக்கி யமர்ந்து, கருந்துகில் ஒன்றினை விரித்து, அதன் நடுவில் மாணிக்கத்தையும், அதைச்சுற்றி முத்து முதலிய எட்டு மணிகளையும் வைத்து, 'இம்மணிகளெல்லாம் வலன் என்னும் அசுரனின் உடற் கூறுகள்' என்று எடுத்துக்கூறினர். வணிகரின்மொழியால் வியப்படைந்த அமைச்சர்கள் அவ்வற்புத வரலாற்றைக் கூறியருள்க' என வேண்டினர்.

**வலன் பெற்ற வரம் :**

வலாசுரன் என்ற அவுணன் மேலோர் நாளில் மூவரினும் மேம்பட்ட முக்கண் மூர்த்தியை நோக்கித் தவம் புரிந்தான். தவத்திற் இரங்கி வந்த தயாளனின் திருவடி வணங்கி ஓர் வரங் கேட்டான் வலன். 'சமரிலே யாராலும் நான் வெட்டுப்பட்டு மாளுதல் கூடாது, ஊழ்வினை வசத்தால் இறப்பேனுனல் என் உடல்,துறந்த தூயோரும் விரும்பும் வண்ணம் நவமணிகளாக

மாறவேண்டும்' என்பதே அவ்வரம். கண்ணுதலும் அவன் கருதிய வரம் ஈந்தார். வரங்கொண்டபின்பு, தருக்குற்ற வலன் வானவர் தலைவனைப் போருக்கழைத்தான். அரக்கனொடு பொரலாற்றாது அமரர் கோன் தோற்றான். வலாசுரனை வெல்ல முடியாது என்று கண்ட இந்திரன் சூழ்ச்சியால் அவனைக் கொலைக் கருதினான்.

அதன்படி தன்னிடம் வந்த தானவர் சிங்கத்தை வரவேற்று ஆசனமளித்து 'அசுரனே உனது புயவலி போற்றற்குரியது. உன்னை வெற்றி கொள்வோர் எங்குமில்லை; உனக்கு வேண்டும் வரம் கேள் - மனமுவந்து அளிப்பேன்' என்றான். தானவன் அது கேட்டு நெடியகை புடைத்து உடல் நிமிர்ந்து, கார்படும் இடியென நகைத்து, 'அமரர்கோனே! நன்றுனதுவார்த்தை! ஈறிலா ஈசனளித்த வரம் பெற்ற நான் உன்னிடமிருந்து எதைப் பெறுவது! போகட்டும்... நான் உனக்கு வரம் தருவேன் விரும்பியதைக் கேள்' என்று விளம்பினான்.

## சூழ்ந்த வலையுள் விழ்ந்தான் :

இத்தருணத்தையே எதிர்நோக்கியிருந்த இந்திரன் மிக மகிழ்ந்து 'இறைவனின் திருக்கரத்து வில்லாகிய மேருமலை யருகில் நான் வேள்வி செய்யும்போது நீ வேள்வியிலிடுதற்குரிய பசுவாகவா' என்று கேட்டுக்கொண்டான். சொல்கேட்டுப் பூரித்தான் அரக்கன். என்றும் ஈவதே பெருமை அன்றியிரக்கின்றது இழிவே அன்றோ! முன்பு ததீச முனிவர் இந்திரனுக்காகத் தன் முதுகெலும்பைத் தந்து புகழுடம்பு பெற்றார். வலன் எண்ணினான். ததீசி என்போல் இரண்டு புகழுடம்பா பெற்றிருந்தார்? இல்லையே! நானோ இறைவனருளால் மாயாமணிகளாக மாறும். ஓர் உடம்பு - கொடையினால் வரும் ஓர் புகழுடம்பு ஆக இரண்டல்லவோ பெற்றுள்ளேன் என்று மனத்தள் மகிழ்ந்து தேவேந்திரனின் வேண்டுகோட்படி வேள்விப் பசுவாக வர இசைவு தந்தான்.

## மாண்டவன் மணிகளானான் :

சொற்படியே வேள்விக் களத்திற்கு வந்தான் வலாசுரன். வாய்மையால் மாண்ட நின்போல் வள்ளல் யாரென்று தேவர்

கோமான் வியந்து பாராட்ட 'மேரு நேமியோடிகலும் விந்த வரையென' - நிமிர்ந்து நின்ற வலன் என்னை வேள்வித்தூணில் கட்டுங்கள் என்றான். பசுவாக இருந்த வலனை யூபத் தூணோடுறுகக் கட்டி வாயைப் பொத்தி உயிர்ப்பை அடக்கினர். சிலம்பிநூலால் கட்டப்பட்ட சிங்கப்போத்தென நின்ற பசு இறந்தபின் அதனை வேள்வியிலிட்டு வானவர்களுக்கு மகிழ் ஊட்டினர். அப்படி இறந்த பசுவின் குருதிதான் மாணிக்க மாயிற்று. பல் - முத்து, மயிர் - வயிடூரியம், எலும்பு - வயிரம், பித்தம் - பச்சை, நிணம் - கோமேதகம், தசை - பவளம், கண் - நீலம், கோழை - புஷ்பராகமானது.

"அத்தகை யாவின் சோரி மாணிக்க மாம்பல் முத்தம்
பித்தவை டூய மென்பு வச்சிரம் பித்தம் பச்சை
நெய்த்தவெண் ணிணங்கோ மேதந் தசைதுகிர் நெடுங்க
[ ணீலம்
எய்த்தவை புருட ராக மிவைநவ மணியின் தோற்றம்"

வணிகர் நவமணிகளைப் பற்றியும் அவற்றின் குணங்குறை பற்றியும் குறிப்பிட்டார்.

### மாணிக்கம்:

இது, பதுமராகம், குருவிந்தம், சௌகந்திகம், கோவாங்கம் என நான்கு சாதியாக விளங்கும். இவற்றுள் பதுமராகம் அணிவோர் அசுவமேதயாகம் செய்த பலனைப் பெறுவர். குருவிந்தந் தரிப்போர் நிறைந்த செல்வத்தோடு வெற்றியும் பெறுவர். சௌகந்திகம் செல்வத்தையும் புகழையும் தரும். கோவாங்கம் பால் - நெய் - செல்வம் இவற்றைப் பெருகச் செய்யும்.

### முத்து:

இது, சலசம் (நீரில் தோன்றுவது) தலசம் (தரையில் தோன்றுவது) என இருவகைப்படும். சங்கு, முகில், மூங்கில், அரவின் தலை, பன்றிக் கொம்பு, வெண்ணெல், சிப்பி, மீன்தலை, கரும்பு, யானையின் தந்தம், சிங்கத்தின் கை, பெண்ணின் கழுத்து, கொக்கின் கழுத்து என்ற பதின்மூன்று இடங்களில் தோன்றும். முத்தை அணிவதால் வறுமை நீங்கி - செல்வம் பெருகி, வாழ் நாள் ஓங்கும்.

**வயிரம் :**

இரத்தினங்களில் இதுவே மேலானதென்பர். வயிரம்தான் மற்றைய மணிகளைத் துளைப்பதற்குக் கருவியாகி, தனக்கும் தானே துளையிடும் கருவியாக விளங்கும். இதை அணிய பகைநீங்கும், நோய் அகலும், குறித்த நாளன்றி இயமனும், பூதங்களும், பேய்களும் துன்புறுத்தாவாம்.

**மரகதம் :**

இது, சகுணம் (குணமுள்ளது) சதோடம் (குறையுடையது) என இருவகைப்படும். சகுணமாக காடம், உல்லசிதம், பேசலம், பித்தகம், முத்தம், பிதுகம் என ஆறினைக் குறிப்பிடுவர். புல் லின் பசிய நிறங்கொண்ட காடமும், மென்மையுடைய உல்ல சிதமும், குளத்தின் நீரால் விளைந்த நெற்பயிரின் முத்தை யொத்த நிறமுடைய பேசலமும், பசுங்கிளியின் சிறகினை ஒக்கும் நிறமுடைய பித்தகமும், துளசியின் நிறங்கொண்ட முத்தமும்; தாமரையின் இலை நிறங்காட்டும் பிதுகமும் ஆகிய குணம் உடைய மரகதம் நால்வகைச் சேனைகளோடு கூடிய சிறந்த நீடித்த வாழ்வைக் கொடுக்கும்.

**நீலம் :**

இந்திர நீலம் - மாநீலம் என இரண்டுண்டு. மாநீலத்தி னும் பதினுயிரமடங்கு பெருவிலையுடையது இந்திரநீலம். எல்லாவகையான நன்மைகளையும் தரும் இது.

**கோமேதகம் :**

உருக்கிய நெய்த்துளி - தேன்துளி போன்ற இம்மணி அஞ் ஞானத்தாலாகிய பாபத்தை நீக்கித் தூய்மையைத் தரும்.

**புஷ்பராகம் :**

இதனை அணிபவர் பகைவர்களை வென்று வெற்றிமாலை சூடும் வன்மை பெறுவர்.

**வயிடூரியம் :**

மூங்கிலின் இலை, மயிலின் கழுத்து, பூனையின் கண்போன்று இருக்கும் இம்மணி, தெளிவு - திண்மையைப் பெற்றிருக்கும். அறிவுடையோர் இதனை நாள்தோறும் பூசித்து அணிவர்.

**பவளம் :**

இதமுருக்கமலர், கிளியின்மூக்கு கொவ்வைக்கனி இவற்றுள் ஒன்றின் நிறங்கொண்டு விளங்கும். இம்மணி பெரும்பாலும் பெண்களே அணிதற்குரியது. மகப்பேறு முதலான பல பலன் களையும் குறைவின்றிக் கொடுக்கும் இது.

**ஊனும் உயிரும் உனதன்றோ :**

' ஒன்பது வகை இரத்தினங்களையும் தனித்தனியே காட்டி, இவற்றைக் கொண்டு மணிமகுடஞ்செய்து இவ் விளவலுக்குச் சூட்டி அபிடேக பாண்டியன் என்ற திருநாமமிடுக ' என்றுகூறி வணிகன் மாணிக்கப்பொதியை அமைச்சர்களிடம்கொடுத்தான். செம்பொன்னைத் துலையால் தூக்கி விலைதர அமைச்சர்கள் வருவதற்குள் வணிகன் மறைந்து விடையவனை விண்ணிழி விமானத்தினுள் புகுதலைக் கண்டார்கள். அளவற்ற ஆச்சரி யத்துடன் அனைவரும் இறைவனின் கருணையைப் போற்றி னார்கள். மீனக் கொடியோனும் தேன் செய்த கொன்றை நெடுஞ்சடையார்முன் தாழ்ந்து எழுந்து யான் செய்யும் கைம்மாறுதான் என்னே ! என்னுடைய ஊன்செய்யுமுடலும் பொருளும் உயிரும் உனதே ஐயா ! '' வான்செய்யும் நன்றிக்கு வையகத்தோர் செய்யும் கைம்மாறும் உண்டோ '' - என அகங் குழைந்தான்.

இறைவனின் ஆணைப்படி மாணிக்கங்களால் மகுடஞ் செய்து மங்கல மரபின்படி மாறனை அரியணையேற்றி அபிடேக பாண்டியனாக்கினார்கள். கருணை மலர்ந்த உள்ளத்தொடு காவலை மேற்கொண்ட பாண்டியன் தன் தந்தையுடைய காமக்கிழத்தி யர் பெற்ற பிள்ளைகளால் கவரப்பெற்ற செல்வங்களையும் கைப் பற்றி இனிதே ஆண்டான்.

(வளரும்)

# திருத்தொண்டர் வரலாறு

திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர்,
**வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.**

( மலர் 28, இதழ் 5, பக்கம் 268 இன் தொடர்ச்சி )

## (16) முருக நாயனார் :

"முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்"

— திருத்தொண்டத்தொகை.

" பதிகம் திகழ்தரு பஞ்சாக் கரம்பயில் நாவினன்சீர்
மதியம் சடையார்க்கு அலர்தொட் டணிபவன் யான்மகிழ்ந்து
துதிஅங் கழற்சண் பைநா தற்குத் தோழன்வன் தொண்டனம் [பொன்
அதிகம் பெறும்புக லூர்முரு கன்எனும் அந்தணனே"

— திருத்தொண்டர் திருவந்தாதி.

சோழவள நாட்டில் உள்ள சிறந்த சிவதலங்களில் ஒன்றாய் இலங்குவது திருப்புகலூர். இத்தலம் அடியவர்கள் அணியும் திருநீறொளியினால் விளக்கம் பெற்றது. பறவைகளும் தேவாரத் திருப்பதிகம் ஓதும் சிறப்பினை உடையது. இச்சிவதலத்தில் அந்தணர் குலத்தில் அவதரித்தவர் முருக நாயனார். நான்மறைகளையும் ஓதியுணர்ந்து ஞானமார்க்கத்தின் எல்லையைக் கண்ட இவர் சிவபெருமானுக்குத் திருப்பள்ளித்தாமம் சார்த்தும் திருத்தொண்டு பூண்டிருந்தார்.

### திருத்தொண்டு :

முருகனார் நாடோறும் வைகறையில் துயிலெழுந்து நீராடி நந்தனவனம் செல்வார். மலரும் நிலையிலுள்ள கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நால்வகைப் பூக்களையும் நிரம்பப் பறிப்பார். வெவ்வேறாகத் திருப்பூங்கூடைகளில்

சேர்த்து உயர்த்தித் தூக்கி எடுத்துவந்து தூய இடத்தில் வைப்பார். இண்டைமாலை, கோவைமாலை, பத்திமாலை, கொண்டைமாலை, சரமாலை, தொங்கல்மாலை முதலிய பல்வேறு திருமாலைகளைக் கட்டி எடுத்துக்கொண்டு பூஜா காலங்களில் வர்த்தமானேச்சுரம் என்னும் அத்தலத்தில் உள்ள சிவாலயத்திறைவற்கு அன்போடு சார்த்துவார். அர்ச்சனைகள் புரிவார். திருவைந்தெழுத்தை இடைவிடாமல் ஓதுவார். இவ்வாறு அன்போடு இறைவனுக்குத் திருத்தொண்டைச் செய்துவந்தார்.

ஞானசம்பந்தர் நட்பு :

முருக நாயனார் உமையம்மையார் அளித்த ஞானப்பாலை உண்டு தேவாரத் திருப்பதிகம் பாடியருளிய திருஞானசம்பந்தர் திருப்புகலூருக்கு எழுந்தருளியபோது அவரது திருவடிகளை வணங்கி வரவேற்றுத் தம் திருமடத்தில் இருந்து உபசரிக்கும் பேறு பெற்றார்.

முன் செய்த பூசைப் பயனால் திருஞானசம்பந்தருக்கு நடைபெற்ற திருமணத்திற்குச் சென்றார். அங்கு ஞானசம்பந்தருக்கு இறைவன் காட்டிய சிவசோதியில் கலந்து இறைவன் திருவடி நிழலில் கலந்து சிவானந்தப் பெருவாழ்வெய்தினார்.

## (17) உருத்திரபசுபதி நாயனார் :

"உருத்திரபசுபதிக்கும் அடியேன்"

— திருத்தொண்டத்தொகை.

"அந்தாழ் புனல்தன்னில் அல்லும் பகலும்நின் றுதரத்தால்
உந்தாத அன்பொடு ருத்திரம் சொல்லிக் கருத்தமைந்த
பைந்தார் உருத்திர பசுபதி தன்னற் பதிவயற்கே
நந்தார் திருத்தலை யூரென் றுரைப்பர்இந் நானிலத்தே"

— திருத்தொண்டர் திருவந்தாதி.

காவிரியால் வளம்பெறும் சோழநாட்டில் உள்ள திருத்தலையூர் என்ற தலம் அறமும் நீதியும் சிறந்து விளங்குவது.

இத்தலத்தில் அந்தணர் குலத்தில் பசுபதியார் என்னும் பெயருடைய பெரியார் அவதரித்தார். இவர் சிவபிரானுக்கு அடிமைத் திறம் நினைந்து வேதத்தில் விளங்கும் உருத்திமந்திரத்தினை அன்போடு இடையறுமல் ஓதும் தொழிலில் தலை நின்ருர். சில நாட்கள் செந்தாமரை மலர்நிறைந்த தடாகத்தில் கழுத்தளவு தண்ணீரில் இறங்கி நின்றுகொண்டு கைகளைத் தலைமீது குவித்து வேதப்பயனுய் விளங்கும் ஸ்ரீ ருத்திரத்தினை இரவும் பகலும் இடைவிடாமல் ஓதி வந்தார். அதனுல் அவர் தாமரைநாயகனுய நான்முகனைப்போல விளங்கினுர்.

**சிவபிரானருள் பேறல் :**

பசுபதியாரின் தவத்தின் பெருமையையும் பக்தியின் சிறப்பையும் அறிந்த பெருமான் அவர்க்கு அருள் நலம் வழங்கினுர். சிவபுரத்தில் இறைவன் சேவடி நிழலில் உறையும் பேறு பெற்ருர். ஸ்ரீ ருத்திரத்தை ஓதிய சிறப்பால் இவர் பெயர் உருத்திரபசுபதியார் என வழங்கப்பெற்ருர்.

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Arunajateswaraswami Devasthanam, Tiruppanandal.

தமிழகத்தில் கோவில் கொண்டிருக்கும் பாடல்பெற்ற ஸ்தலங்களின் நிர்வாகம் சிறப்பாக நடைபெற்று வருவதைக் காணும் எவரும் பாராட்டுவார்கள். ஆண்டவன் இந்த தெய்வ சுவாமிகளின் தொண்டுக்குத் துணைபுரியும்படி வேண்டுகிறேன்.

(Sd.) U. K. Moorthy,
Editor,
Desa Oozhien Newspaper,
Trichirappalli - 2.

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான்,

சிவஸ்ரீ. s. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 28, இதழ் 5, பக்கம் 283 இன் தொடர்ச்சி )

**மகேச்வர வடிவங்கள் :**

1. சந்திரசேகரர், 2. உமாமகேசர், 3. விருஷபாரூடர், 4. நிருத்தமூர்த்தி, 5. கல்யாணசுந்தரர், 6. பிக்ஷாடனர், 7. காமாரி, 8. காலகாலர், 9. திருபுராரி, 10 ஜலந்தரவதர், 11. கஜாரி, 12. வீரபத்ரர், 13. ஹர்யர்த்தர், 14 அர்த்த நாரீசர், 15. கிராதர், 16. கங்காளர், 17. சண்டேசானுக்ர ஹர், 18. விஷாபஹரணர், 19. சக்ரதாரணர், 20. விக்ன ப்ரசாதர், 21. சோமாஸ்கந்தர், 22. ஏகபாதர், 23. சுகா சனர், 24. தக்ஷிணாமூர்த்தி, 25. லிங்கோத்பவர்.

करिकाम पुरारिस्तु कालारिस्त्वेव मादयः ।
उग्रास्तु मूर्तयः प्रोक्ता ह्यशेषा ह्यशान्ता उदाहृताः ॥

கஜாரி, காமாரி, புராரி, காலாரி முதலிய மூர்த்திகள் உக்ரமூர்த்திகள். மற்றமூர்த்திகள் சாந்தமூர்த்திகள் ஆம்.

रुद्रमूर्त्तिस्थिता चेत्तु ग्रामादौ तु तदग्रके ।
शान्तमूर्त्ति प्रतिष्ठांतु कारयेद्देशिकोत्तमः ॥

— காமிகம்.

க்ராமம் முதலானவிடங்களில் உக்ரமூர்த்தியானது ஸ்தாபிக் கப்பட்டிருக்குமானல் அதன் எதிரில் சாந்தமூர்த்தியை ப்ர திஷ்டை செய்யவேண்டும்.

तटाकं कारयेद्वापि तेन शांतिर्विधीयते ।

— காமிகம்.

அல்லது குளமாவது வெட்டினுல் அதனல் சாந்தி அடையும்

शिवपूजायुतंवास्तु नान्यच्छास्त्रस्य निश्चयः ।

— காமிகம்

சிவபூஜை உள்ள வாசஸ்தானமே வாசஸ்தானமாகும். மற்றது வீண் என்பது சாத்திரங்களின் முடிவு.

श्रीपतेः पूजया नित्यं प्रजावृद्धिर्भविष्यति ।
सूर्यस्य पूजया नित्यं ग्रहपीटा विनश्यति ॥
इन्द्रपूजा मनुष्याणां प्रभावं संप्रयच्छति ।
सुब्रह्मण्ययार्चनं नित्यं बालानां हितकृत्भवेत् ॥
शास्तुः पूजा स्वकृत्येषु नियुङ्क्ते वास्तुवासिनः ।
कामस्य पूजा कुरुते सौन्दर्यं वास्तुवासिनाम् ॥
उमा पूजा विशेण विजयं संप्रयच्छति ।
पूजिताचेन्महामोटी बालरोग विनाशिनी ॥
सर्वसिद्धि रविघ्नेन विघ्नेशस्य सपर्यया ।
ज्येष्ठापूजा विशेषेण रोगघ्नी वास्तुवासिनाम् ॥
लक्ष्मीपूजा श्रियदद्याद लक्ष्मीं च व्यपोहति ।
वाग्विभूतिं सरस्वत्याः पूजानित्यं प्रयच्छति ॥
मातृपूजा सदा सर्वसंपदं कुरुते द्विजाः ।
सर्वेषां पूजया यत्तत्फलं दद्यान्महेश्वरः ॥
तस्मान्महेश्वरो नित्यं पूजनीयः फलार्थिभिः ।

— காமிகாகமம்.

திருமாவின் பூஜையால் பிரஜாவிருத்தி உண்டாகும். சூரியனுடைய பூஜையால் க்ரஹசாந்தி உண்டாகும். இந்திர பூஜையால் மஹிமை உண்டாகும். சுப்பிரமண்ய பூஜையால் பாலர்களுக்கு நன்மை உண்டாகும். சாஸ்தாவின் பூஜையால் தன் தனது காரியங்களில் சிரத்தையுள்ளவர்களாக ஆவார்கள். மன்மதனுடைய பூஜையால் அழகு உண்டாகும். தேவி பூஜையால் எப்போதும் ஜயம் உண்டாகும். சாமுண்டியை பூஜிப்பதால் பாலர் கிருஹதோஷம் நீங்கும். விக்னேசனைப் பூஜிப்பதால் தடை நீக்கத்துடன் சர்வசித்தியும் உண்டாகும். ஜ்யேஷ்டா தேவியை பூஜிப்பதால் பிணியகலும். லக்ஷ்மியைப் பூஜிப்பதால்

வறுமை நீக்கத்துடன் லக்ஷ்மீ ப்ராப்த்தி உண்டாகும். சரஸ்வதியைப் பூஜிப்பதால் வாக்விபூதி உண்டாகும். சப்த்தமாத்ரு பூஜையால் சர்வசம்பத்துக்களும் உண்டாகும். இந்த எல்லோருடைய பூஜையாலும் எந்தெந்த பலன்கள் கிடைக்கின்றனவோ அந்த பலன் யாவும் சிவபூஜையால் கிடைக்கிறது. ஆதலால் சிவபூஜையை எப்போதும் செய்யவேண்டும் என்று காமிகாகமம் கூறுகிறது.

உக்ரமான கர்மாக்களில் உக்ரமான தேவர்களைப் பூஜித்துப் பயன்பெறவேண்டும். இதுபோல் விஷ்ணுமூர்த்திகளிலும் உக்ரமூர்த்திகள் உளர். அவர்கள்

विश्वरूपं नृसिंहं च वटशायिन मेव च ।
जामदग्न्यं च जानीया दुग्रं वैष्णव विग्रहम् ॥

— காமிகாகமம்.

விச்வரூபம், நிருசிம்மம், ஆலிலைகிருஷ்ணன், ஜமதக்னி, இவர்கள் உக்ரமூர்த்தியாவார்கள்.

இவ்வாறு சிவபேதங்களில் 64 வடிவங்கள் காணப்படுகின்றன. இவ்வடிவங்கள் அவருடைய அரிய செயல்களைக் காட்டும் வடிவங்கள் (தோற்றங்கள்)

இவ்வாறு இலிங்கம் பிம்பம், முதலியவைகளையும் அதன் உறைவிடமான ஆலயங்களையும் அறிந்து அந்த ஆலயங்களில் நடத்தப்படும் நித்ய நைமித்திக காம்ய பூஜைகளை அறிந்து அதன்படி வழிபட்டு இம்மை மறுமைப் பயன்களைப் பெறவேண்டியதன் பொருட்டுக் கூறவேண்டியதான மூன்றுவித பூஜையினுள் நித்யபூஜையும் அதற்கு அங்கமான நித்யகர்மாவும் கூறப்படுகின்றன.

இதுவரை தந்திரகலை கூறப்பட்டது. இனி மந்திரகலை தொடங்கப்படுகிறது.

प्रातश्शंकरचिन्दन स्नपन संसेवकासु संरोधनै
स्सन्ध्या संस्मृति मार्जनाघशमनोपस्थान संतर्पणैः ।

द्वारस्यार्चन यागधामगत विघ्नोद्वासनाद्यैः प्रभो
यैश्रीमान्यजनं करोति भवतः तस्यैव सिद्धिद्वयम् ॥

— சிவபூஜாஸ்தவம்

காலையில் எழுந்து சிவனைத் துதித்து காலைக்கடன்களை முடித்து ஸ்நானம் சந்தி மார்ஜனம் அகமர்ஷணம் உபஸ்தானம் சந்தர்பணம் முதலியவைகளுடன் ஆன்மார்த்த பூஜையில் த்வார பூஜை விக்நோத்வாஸனம் முதலியவைகளால் எவர் உன்னை உபாசிக்கிறார்களோ அவர்களுக்குப் புக்தி முக்தியைச் செய்கிறாய் என்று இறைவனைப் பார்த்துக் கூறும் முறை சிவபூஜாஸ்தவம் என்னும் நூலில் ஞானசம்பு சிவாசாரியார் என்ற பத்திக்காரர் கூறுகிறார்.

பத்ததி என்பது அனுஷ்டிக்கும் முறையை அறிவிக்கிறது என்று பொருள். அதாவது 28 ஆகமங்களிலும் கூறப்பட்டதை எடுத்து அந்த ஆகமவிதிக்கும் முரணாகாத முறையில் நித்ய நைமித்திக காம்ய கர்மாக்களைச் செய்யவேண்டிய வரிசையையும் அததற்குரிய மந்திர தந்திர பாவனைகளையும் விளக்கமாக கூறுகின்ற நூலாகும். இந்த நூலைச் செய்தவர்கள் 18 பேர்கள்.

(தொடரும்)

---


## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக் கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 3—00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்.

உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை B. A, B L., அவர்கள்

குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

## ஐயாற்றில்
## அப்பருக்கு அப்பர் அளித்த கயிலைக் காட்சி

கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான்,

**திரு. வை. சுந்தரேச வாண்டையார்**

(மலர் 28, இதழ் 5. பக்கம் 276 இன் தொடர்ச்சி)

### வடகயிலைச் செலவு

தம்முடன் தொடர்ந்த அடியார் குழாங்களை நிறுத்தி, தாம் மாத்திரம் தனியாகச் சென்று இடை இடையே தலங்களை வணங்கி தமிழ்நாடு கடந்து, அடுத்து தெலுங்கு, கன்னட நாடு களையும் நீங்கி, மாளவம், இலாடபூமி, மைதிரம் இவைகளைக் கடந்து கங்கை அணைந்து சென்று, வாரணாசியைப் பணிந்து, பின் வடக்கே செல்லும்படியான கல்வழியே சென்றார். ஒருநாள் பயணமா? இருநாள் பயணமா? பலப்பல காதங்கள் காலால் நடந்து செல்லவேண்டுமே. இடை இடையே பசிக்கு என் செய்வார்? வழியில் எதிர்ப்பட்ட காய், கனி, கிழங்கு முதலிய வற்றை உண்டு வழியில் காணும் நீர் நிலைகளுள் தண்ணீர் பருகி இரவில் தூங்கின நேரம்போக இரவும் பகலுமாய் நடந்து கயிலை மலையை அடைந்தார். கயிலைமலை என்பது இமய மலைச் சாரலில் உள்ளது. இதனைப்,

பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரி யான்என்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை

(திருமலைச் சிறப்பு - பாடல் 1)

என்னும் பெரிய புராணத்தால் அறிக.

இவர் வனாந்தரம் வழியாகச் செல்லும்பொழுது புலி முதலிய வனவிலங்குகள் சிவனடியாராகிய இவர்க்கு அஞ்சி ஒரு தீமையும்

செய்யா தொழிந்தன. நாகங்கள் இரவில் இவர் செல்லுங்கால் தமது இரத்தினங்களைக் கக்கி விளக்கெடுத்தன. இவ்வாறு செல்கின்றனர் நமது நாயனர். இளைப்பா, சலிப்பா, மனத்தளர்ச்சியா இவை எதுவும் தோன்றவில்லை. இவை ஒன்றும் தோன்ருவாறு கயிலை காணும் நோக்கு ஒன்றே மிகுந்து நின்றது. அடுத்தாற்போல் ஒரு பாலைவனம் இருந்தது. அதனையும் கடந்து கல்வழியே செல்லச்செல்ல நடந்த கால்கள் பரட்டளவும் தேய்ந்தன. இனி கால்களால் நடக்க முடியாது. கைகள் இருக்கின்றனவே. அவை பெற்ற பயன் இதைவிட வேறு யாதுளது? என்று கையை ஊன்றி அக்கொடிய கல் வழியே சென்ருர். கால் தேய்ந்தபோது கை எத்தனை நாளைக்கு நிற்கும்? கைகளும் தேய்ந்துபோயின. இன்னும் கயிலை எத்தனை தூரம் இருக்கின்றதோ? காலும் தேய்ந்து கையும் தேய்ந்தவிட்டதே! இனி எப்படிச்செல்வது? ஏன் என்னுடைய மார்பு இருக்கின்றதே, மார்பினல் நகர்ந்து நகர்ந்து செல்வேனுக என்று அவ்வாறே நகர்ந்துசென்ருர். மார்புதான் எத்தனை நாள் தாங்கும்? அது தேய்ந்தாலும் அவரது கயிலை காணும் ஆர்வமும் முயற்சியும், உறுதிப்பாடும், தளராத மன ஊக்கமும் சற்றும் தேயவே இல்லை.

இனி, எஞ்சிய உடம்புகொண்டு உருண்டு உருண்டு செல் வேனுக என்று அவ்வாறே உருண்டு சென்ருர். என்னே எங்கள் அப்பர் பெருமானின் வினைத்திட்பம். என்னே எங்கள் குல தெய்வத்தின் கடைப்பிடி! என்னே எங்கள் பரமாசாரியாரின் பிடிவாதம்! இவர் உறுதிப்பாட்டை உலகினர்க்குக் காட்ட எண்ணிய எங்கள் ஆண்டவனின் மறக்கருணைதான் என்னே! என்னே! அப்புறம் செயல் யாது? தலைப்பாகம்தான் மிச்சம். அதை உருட்டினுல் உடம்பு உருளுமா? உடம்பை உருட்டினுல் தலை உருளும். செயல் நின்றது. ஆர்வமும் உறுதியும் செயலை நோக்கி நிற்கின்றன. இவ்வாறு இவரைத் தன்புறுத்தியது எது? இவர்பாடும் தமிழ் வேதம்தான், இங்ஙனம் இவரைக் கொண்டு தமிழ்நாட்டினர்க்கு இன்னும் பல சைவ உண்மைகளை யும் அடிமைத் திறத்தினையும் விளக்கும் தேவாரப் பதிகங்களைப் பாடி நலம் புரியுமாறு எண்ணினன் எல்லாம்வல்ல ஆண்டவன். இதைப்படிக்கும் நமக்கே மனம் கசிந்து உருகுகின்றதே. அணைத்துயிர்க்கும் அன்னையாம் ஆண்டவன் உள்ளம் இன்னுமா உருகாதிருக்கும்? உடனே தோன்றினர் ஒரு முனிவர் வடிவத்

தோடு. அப்பர் கிடக்கும் இடத்திற்கு ஓடி வந்தார். அப்பர் பெருமான் நோக்கும்படி நின்றனர். அப்பெருமான் அருகில் ஒரு குளம் தோன்றிவிட்டது. சடைமுடி மரவுரி திருநீற்றுக் கோலத்துடன் அப்பர் பெருமானை நெருங்கி, யாரையா? என்ன இப்படி உடம்பு தேயும்படிச் செய்துகொண்டீரே. உம்முடைய கருத்து யாது என வினவ, அடியேன் சர்வலோக நாயகியாகிய அம்மையாருடன் எங்கள் அப்பனும் சிவபெருமான் திருக்கயிலையில் வீற்றிருக்கும் கோலத்தைக் கண்ணாரக் காணச்செல்லும் முயற்சியில் இங்கிலை உற்றேன் எனலும், முனிவர் என் செய்தீர்! திருக்கயிலை தேவர்களுக்கும் சென்று காணமுடியாதது. அங்ஙனம் இருக்க மனிதப்பிறப்பினர் எங்ஙனம் அடையற்பாலர்? ஆதலின் இவ்வாசையை முற்றிலும் மறந்து மீள்வதே கருமம் என்றார்.

கேட்ட திருநாவுக்கரசர் கால் தேய்ந்தது கை குறைந்தது, மார்பு ஒடுங்கியது. இவற்றிலும் வருந்தாது மிக்க வருத்தமும் சினத்தோடு எழ, "மீள்வதா" அந்தப்பேச்சு இங்கில்லை திருக்கயிலையில் இருக்கும் கோலங்கண்டு தரிசித்தன்றி மீளேன் மீளேன் இது உறுதி. ஐயர் எனக்கு அருளுவர். இதில் மிக்க உறுதியும் நம்பிக்கையும் உண்டு என்றனர். எனவே இவரது அளவிறந்த துணிவுடைமையைக் கண்ட ஆண்டவன் இவரை மாற்ற முடியாது. நாமாவது நமது வடிவை மாற்றிக்கொள்வோம் என்பவர்போல, வானில் மால்விடைமீது மலையாள் ஒரு பாகமாகத் தோன்றக் காட்சியளித்தனர். கண்டு களிகூர்ந்தார் எங்கள் அப்பர் பெருமான்.

ஐயர் திருவாக்கு "திருநாவுக்கரசரே எழுந்திரும்" என்றலும் தேய்ந்துபோன அவயவங்கள் எப்படி வளர்ந்தன. அப்பர் உடல் பழைய உடலாக இருக்கின்றதே! அண்டங்கள் அணுக்களாகவும் அணுக்கள் அண்டங்களாகவும் செய்யவல்ல அவன் அருளை யார் அறிவார்? எழுந்த திருநாவுக்கரசர்,

> அண்ணலே எனை ஆண்டுகொண் டருளிய அமுதே
> விண்ணிலே மறைந் தருள்புரி வேதநா யகனே
> கண்ணி னால்திருக் கயிலையில் இருந்தநின் கோலம்
> நண்ணி நான்தொழ நயந்தருள் புரிஎனப் பணிந்தார்

பெருங்கருணைத் திருவுருவப்பெருமான் அப்பரை நோக்கி உமக்குத் திருக்கயிலைக்கோலக் காட்சி வேண்டும். அக்காட்சியை

எவ்விடத்தில் காட்டினும் அமையும். "இதோ இக்குளத்தில் முழுகும், மூழ்கினால் திருவையாற்றுக் குளத்தில் எழுந்திருப்பீர். எழுந்த அளவையில் அங்கு உமக்குத் திருக்கயிலைக் காட்சியை அளிப்போம்" என அருளினர்.

இதைப்பற்றி ஓர் பேரறிஞர் கூறுவது :- சேரமான் பெருமாள் நாயனுர்க்கும் காரைக்கால் அம்மையார்க்கும் கொடுத்த திருக்கயிலைக்காட்சி அப்பருக்கு அளிக்கலாகாதா? அப்பர் தகுதியற்றவரா? என்பது.

இல்லை நம்மைத் தேடிவந்து, நாம் இருக்கும் இடம் அடைந்து வர, அப்பருக்குக் காட்சி கொடுப்பது நம் பெருமைக் குத்தகாது. அவர் நம்மைத் தேடுவதற்குப் பதிலாக நாம் அவரைத் தேடிச்சென்று அவர் இருக்கும் இடத்திலேயே காட்சி கொடுத்தால்தான் நமக்குப்பெருமை என்று சிவபெருமான் திருவையாற்றில் காட்சி கொடுத்தனர். இதற்குச் சான்ருக நமது அப்பர் பெருமான்,

தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்

எனத் திருவண்ணமலைத் திருக்குறுந்தொகைப் பதிகத்திலும்,

"நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே"

என நமச்சிவாயப் பதிகத்திலும் திருவாய் மலர்ந்தருளியமை காண்க.

உடனே அப்பமூர்த்திகள் திருஐந்தெழுத்தை ஓதி அக் குளத்தில் முழுகி திருவையாற்றிலிருக்கின்ற ஒரு வாவியின் மேலே தோன்றிக் கரையேறினர். 'யாதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்றபோது" என்னும் அப்பர் பெருமான் திருவாக்கும், "குளிச்சி எழுந்த நாயனுர்" என்று திருப்புகலூர் கல்வெட்டில் குறிப்பிடப்படுவதும் இந்நிகழ்ச்சிக்குச் சான்ருகவாகும்.

( தொடரும் )

# செய்திகள்

தருமையாதீனத்தில்

## திருநாவுக்கரசுசுவாமிகள் குருபூசை விழா

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் சௌமிய ஆண்டு சித்திரைத்திங்கள் 28 ஆம் நாள் (10—5—69) சனிக்கிழமை காலை சித்திரைச் சதயத் திருநாளை முன்னிட்டு ஸ்ரீ திருநாவுக்கரசுசுவாமிகளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. இரவு ஆதீன ஓதுவாமூர்த்திகளின் பண்ணிசைப் பாராயணத்துடன் சிவிகையில் திருநாவுக்கரசுசுவாமிகள் திருவீதியுலா அற்புத விளக்க விரிவுரையுடன் நிகழ்ந்தது. திரு. வி. சா. குருசாமிதேசிகர் தருமையாதீனப்புலவர், வித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார், திரு. வி. சபேசன் திரு. வை. சுந்தரேச வாண்டையார் ஆகியோர் அற்புதவிளக்கச் சொற்பொழிவாற்றினர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி. அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினர்கள்.

## சித்திரைத் திருவிழா

திருப்பனந்தாளில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்திருவிழா 22—4—69 செவ்வாய்க்கிழமை முதல் தொடங்கி 1—5—69 முடிய உள்ள நாட்களில் நடைபெற்றது.

22—4—69 செவ்வாய்க்கிழமைகொடியேற்றமும். 26—4—69 சனிக்கிழமை தன்னைத்தான் அருச்சித்தலும். 28—4—69 திங்கட்கிழமை திருக்கல்யாணமும், 30—4—69புதன்கிழமை திருத்தேர்த் திருவிழாவும், 1—5—69 வியாழக்கிழமை பஞ்சமூர்த்திகளும் அணைக்கரைக்கு எழுந்தருளி கொள்ளிடத்தில் தீர்த்தம் கொடுத்தருளலும் சிறப்பாக நடைபெற்றன. நாள்தோறும் சிறந்த

நாதஸ்வர இன்னிசை நிகழ்ச்சிகளுடன் திருவீதியுலா சிறப்பாக நடைபெற்றது.

விழா நாட்களில் மாலையில் சமயச் சொற்பொழிவுகளும், கதாகாலக்ஷேபம் இன்னிசை முதலிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

**திருவையாற்றில் :**

தருமையாதீனம், திருவையாறு ஸ்ரீ தர்மசம்வர்த்தனி அம்பாள் சமேத ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி என வழங்கும் ஸ்ரீ அறம் வளர்த்தநாயகி உடனுறை ஸ்ரீ ஐயாறப்பர் திருக்கோயிலில் சித்திரைத் திருவிழா 22—4—69 செவ்வாய்க்கிழமை முதல் தொடங்கி நடைபெற்றது. 26—4—69 சனிக்கிழமை பெருமான் தன்னைத்தான் பூஜித்தலும், ஆறூர் சுவாமிகள் ஐயாற்றுக்கு எழுந்தருளலும், பெருமான் இடப வாகனத்தில் எழுந்தருளி மாகேசுவரபூஜை செய்தல் முதலியனவும், 28 4—69 திங்கட்கிழமை கோரதக்காட்சியும், 30—4—69 புதன்கிழமை திருத்தேர்த் திருவிழாவும் 1—5—69 வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்றன. 3—5—69 சனிக்கிழமை ஸ்ரீ நந்திகேஸ்வரர் சுயசாம்பிகையுடன் மணக்கோலமாய் வெட்டிவேர்ச்சிவிகையிலும் ஸ்ரீ ஐயாறப்பர் அறம்வளர்த்தநாயகியாரோடு விசித்திரக் கண்ணாடிச் சிவிகையிலும் எழுந்தருளி ஏழூர் வலம் வருதல். (சப்தஸ்தான பிரதக்ஷிணம்) 4—5—69 ஞாயிற்றுக்கிழமை ஏனைய ஆறூர்ப் பல்லக்குக்களுடன் ஐயாற்றுக் கோயிலுள் வரும் ஆனந்தக்காட்சி முதலியன சிறப்பாக நடைபெற்றன. விழா நாட்களில் அறிஞர்களின் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

**திருக்கடவூரில் :**

திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்பாள் சமேத ஸ்ரீ அமிர்தகடேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் 22—4—69 செவ்வாய்க்கிழமைமுதல் சித்திரைத் திருவிழா தொடங்கி நடைபெற்றது. 24—4—69 வியாழக்கிழமை திருக்கல்யாணமும், 26—4—69 சனிக்கிழமை இடபவாகனக்காட்சியும், சகோபுர தரிசனமும், 27-4-69 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ காலசம்காரமூர்த்தி வீரநடன தரிசனமும், காலசம்காரமும், தர்மராஜனுக்கு அனுக்கிரகித்தருளலும், 29-4-69 செவ்வாய்க்கிழமை திருத்தேர்த் திருவிழாவும், 1—5—69 வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றன. 27—4—69 ஞாயிற்றுக்கிழமை காலசம்காரத் திருநாள். அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி

வழிபாடாற்றி, காலசம்காரமூர்த்தியைத் தரிசனம்செய்து அன்பர் களுக்குப் பிரசாதம் முதலியவை வழங்கியருளினுர்கள். மக்கள் திரளாகக் கூடி காலசம்காரக் காட்சியைத் தரிசனம் செய்து மகிழ்ந்தனர். விழா நாட்களில் அறிஞர்களின் சமயச் சொற் பொழிவுகள் நிகழ்ந்தன. அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்த்தனர்.

சீகாழியில்:

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான சீகாழி ஸ்ரீசட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திங்கட் பெருவிழா 22—4—69 செவ்வாய்க்கிழமை தொடங்கி நடைபெற்றது. 23-4-69 புதன்கிழமை திருமுலைப்பால் திருவிழா வும், 27—4—69 ஞாயிற்றுக்கிழமை திருக்கல்யாணமும், 29—4—69 30—4—69 செவ்வாய், புதன்கிழமைகளில் திருத்தேர்த் திருவிழா வும், 1—5—69 வியாழக்கிழமை துவஜாரோகணமும் நிகழ்ந்தன.

23-4-69 புதன்கிழமை திருஞானசம்பந்தருக்குப் பெருமானும் பெருமாட்டியும் இடபவாகனத்தில் பிரமதீர்த்தக் கரைக்கு எழுந்தருளி ஞானப்பால் அருளிய திருநாள். அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழி பாடாற்றினுர்கள். திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் திருஞான சம்பந்தர் புறப்பாட்டின்போது அற்புதவிளக்க விரிவுரைக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஆசி வழங்கி சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கனம். திரு. N. கிருஷ்ணசாமிரெட்டியார் B. A., B. L., அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தி அருளாசி வழங்கினுர்கள். ஆண்டுதோறும் இத்திருநாளில் திருமுறை வாணர்களுக்குத் திருமுறைக்கலாநிதி என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தல்போல இவ்வாண்டு தருமையாதீனம் ஆச்சாள்புரம் தேவஸ்தானம் ஓதுவார் திரு. காசிநாத தேசிகர் அவர்களுக்குத் திருமுறைக் கலாநிதி என்ற பட்டம் வழங்கிப் பொன்னுடை போர்த்தி ஆசி அருளினுர்கள். பின்னர் நீதிபதி அவர்கள் அற்புத விளக்கவிரிவுரையைத் தொடங்கிவைத்தார்கள். பின்னர் வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், வித்துவான், ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள், சென்னை திருமதி. காஞ்சனமாலை அம்மையார் வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர், வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனுர் எம். ஏ., (டிப்-லிங்), திரு. R. வேலாயுத ஓதுவாமூர்த்திகள் ஆகியோர் அற்புத விளக்கவிரிவுரையாற்றினர்.

திருஞானசம்பந்தர் பிரம தீர்த்தக் கரைக்கு எழுந்தருளியானதும் திருமுலைப்பால் விழா சிறப்பாக நிகழ்ந்தது. பொற்கிண்ணத்தில் அம்மை யளித்த பால் ஞானசம்பந்தருக்கு நிவேதனம் செய்யப்பெற்றது. அன்பர்கள் பலர் நிவேதனத்திற்குப் பால் கொணர்ந்து கொடுத்தவண்ணம் இருந்தனர். பின்னர் அன்பர்களுக்கு நிவேதனம் செய்யப்பட்ட பால் வழங்கப்பட்டது. இடபவாகனத்தில் பெருமானும், பெருமாட்டியும் எழுந்தருளிய காட்சியைக் கண்டு மக்கள் பரவசமடைந்தனர்.

விழா நாட்களில் நாள்தோறும் மாலை 6-மணிமுதல் திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் திருமுறை மாநாடு நடைபெற்றது. அறிஞர்கள் பலர் கலந்துகொண்டு சொற்பெருக்காற்றினர். மேலும் இன்னிசை; இன்னிசைச் சொற்பொழிவு முதலிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அன்பர்கள் கேட்டு மகிழ்ந்தனர்.

## ஸ்ரீ சட்டைநாத சுவாமிக்குச் சிறப்பு வழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில், மலைக்கோயிலின் உச்சியில் தென்பால் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சட்டைநாதசுவாமிக்கு 9-5-69 வெள்ளிக்கிழமை பதினைந்தாவது சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

காலையில் ஸ்ரீ முத்துச்சட்டைநாதருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் இரவு வெள்ளி மஞ்சத்தில் புறப்பாடும் சிறப்புற நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் தரிசனத்திற்கு எழுந்தருளி வழிபாடாற்றி மலைக்கோயிலில் புழுகாப்புத்தரிசனமும் செய்து, அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கி, தருமைக்கு எழுந்தருளினார்கள். சீகாழிப்பெருமக்களும் மற்றும் பலரும் ஸ்ரீ சட்டைநாதப்பெருமானை வழிபட்டு மகிழ்ந்தார்கள். சிறப்பு வழிபாட்டை முன்னிட்டு மாலை 6 மணி அளவில் "ஆபதுத்தாரணர் மாலை" என்ற தலைப்பில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப்பொறுப்பு முதல்வர் திருநெறிச்செம்மல், நல்லிசைப் புலவர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். அன்பர்கள்பலர்கேட்டுமகிழ்ந்தனர்.

**காரைக்கால் தருமபுரத்தில் :**

## மகாகும்பாபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருத்தருமபுரம் ஸ்ரீ யாழ்மூரிநாத சுவாமி தேவஸ்தானத்தில், ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளாணையின் வண்ணம் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்தது. விமானங்களைப் புதுப்பித்தும், திருமதில் எடுத்துக்கட்டியும், முன் பக்கம் நடைபாதைத் தளவரிசை செய்தும் திருப்பணிகள் பல செய்விக்கப்பெற்றன. திருக்கோவிலின் முன்னர் அன்பர்கள் பலரும் தரிசிப்பதற்கு வாய்ப்பாக யாகசாலை சிறந்த வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பெற்றிருந்தது. பந்தல் முகப்பு, மின்விளக்கு முதலியனவும் சிறந்த முறையில் அமைந்து பொலிவுடன் விளங்கின. 18-4-69 வெள்ளிக்கிழமை யாகசாலையில் யாகபூஜை காலம் தொடங்கப்பெற்றது. 19-4-69 சனிக்கிழமை காலைமாலை இரு வேளைகளிலும் 20-4-69 ஞாயிற்றுக்கிழமை காலையிலும் ஆக நான்குகால பூஜைகள் நடைபெற்றன. 20-4-69 ஞாயிற்றுக்கிழமை காலை ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் எழுந்தருளி யாகசாலை பூர்ணாகுதிவழிபாடாற்றினார்கள். பின்னர் மங்கலவாத்ய முழக்கத்துடன் யாகசாலையிலிருந்து கடங்கள் புறப்பாடாயின. காலை 10 மணி அளவில் மகாகும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்தது. காரைக்கால் முதலிய இடங்களிலிருந்தும் அன்பர்கள் பலர் கும்பாபிஷேகத்தைத் தரிசித்து இறையருளைப் பெற்றனர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்களுக்குக் கும்பாபிஷேகப் பிரசாதம் வழங்கி கும்பாபிஷேகத்திற்கு வருகை புரிந்த புதுவை அறநிலைய அமைச்சர் அவர்களுக்குப்பொன்னாடை போர்த்தி ஆசியருளினார்கள். கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 18...4..69 முதல் வேத சிவாகம பாராயணமும் திருமுறைப் பாராயணமும் சமயச் சொற்பொழிவுகள் முதலியனவும் நடைபெற்றன.

19...4...69 வெள்ளிக்கிழமை மாலை 7 மணி அளவில், தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் சிரோமணி, திரு. வி. சபேசன் "ஞானத்தமிழ்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றிய பின்னர், தருமையாதீனத் தேவார பாடசாலை ஆசிரியர் திரு. ஆர். வேலாயுத ஓதுவார் திருநீலகண்ட யாழ்ப்பாணர் வரலாற்றைக் கதாகாலக்ஷேபமாக நிகழ்த்தினார்கள்.

19...4...69 சனிக்கிழமை மாலை 7 மணியளவில் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பொறுப்பு முதல்வர் திருநெறிச் செம்மல், நல்லிசைப்புலவர், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் "திருமுறைப் பெருமை" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர்கள். 20...4...69 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி அளவில் நாகைப்பட்டினம் தேசிய உயர்பள்ளித் தமிழாசிரியர், தருமையாதீனப் புலவர் வித்துவான், திரு. வை. மு சண்முக தேசிகர் அவர்கள் குழுவினரால் கண்ணப்பர் வரலாறு கதாகாலக்ஷேபமாக நிகழ்த்தப்பட்டது.

## அப்பர் குருபூசைப் பாத யாத்திரை வேள்வித் தொடக்க விழா

திருவாரூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூசை விழாவை முன்னிட்டு 81 அன்பர்களைக்கொண்ட பாத யாத்திரைக் குழுவினர், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில், சென்னை தியாகராயநகர் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்திலிருந்து, தமது பாத யாத்திரையை 30-4-69 அன்று மாலை தொடங்கினர். விழாவிற்கு நீதிபதி கனம், பி. எஸ். கைலாசம் அவர்கள் தலைமை வகித்தார்கள். பேராசிரியர், டாக்டர், திரு. மு. வரதராசனர் அவர்கள் பாத யாத்திரை விழாவைத் தொடங்கி வைத்தார்கள். திருமதி. சௌந்தரா கைலாசம் அவர்கள் அப்பர் குருபூசை விழாமலரை வெளியிட்டார்கள். தொடக்கவுரையாற்றிய பேராசிரியர், திரு மு. வரதராசனர் அவர்கள் 'அறிவால் உயர்ந்தவர்கள் உடலுழைப்பும் செய்ய வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவர் அப்பர் பெருமான். அதனை இக்கால மக்கள் யாவரும் உணரவே, அவர் தமது திருக்கையில் [உழவாரப்படை ஏந்தியுள்ளார். அவர் பாத யாத்திரையாகவே பாரதநாடு முழுவதும் சென்று தலங்களைத் தரிசித்துப் பக்தி நெறியைப் பரப்பியவர். 1300 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது என்று இதனை எளிதாகக் கருதி, நாம் புறக்கணித்தல் கூடாது. இந்நூற்றாண்டிலும் அப்பர் பெருமானின், அடிச்சுவட்டைப் பின்பற்றியே, காந்தியடிகள் தமது பாதயாத்திரை மேற்கொண்டு பாரதநாட்டிற்குப் பெருவெற்றியைத் தேடித்தந்திருக்கிருர். காந்தியடிகள் கடைபிடித்த சத்தியாக்கிரஹம், உண்ணு நோன்பு முதலியன திருநாவுக்கரசர் வாழ்விற் கண்டனவே' என்று குறிப்பிட்டார். நீதிபதி கனம், பி. எஸ். கைலாசம், பாதயாத்திரை செய்தல் கூடாது என்று எவரும் கருதலாகாது. அதனல் பெரும் பயன்

விளையும் என்பதைப்பெரியோர்களின் வாழ்வில் காண்கின்றோம். சைவ சமயாசாரியார்கள் பாதயாத்திரை செய்தது போலவே ஆதி சங்கரரும் தமது அத்வைத கொள்கையை இந்தியா முழுவதும் பாதயாத்திரையின் மூலமாகவே பரவச்செய்து மக்கட் பண்பை உயர்த்தி இருக்கின்றார். தற்போது உள்ள காமகோடி பீடம் சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களும் பாத யாத்திரையின் மூலம் மக்கட்கு சமயப்பண்பைப்பெரிதும் ஊட்டிவருகின்றார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரையும் நன்றியுரையும் நவின்றார்கள் பின்னர், பாதயாத்திரைக் குழுவினர் சிவ விஷ்ணு ஆலயத்தில் வழிபாடு செய்துகொண்டு கிண்டியில் உள்ள மணலி ராமகிருஷ்ண முதலியார் மாணவர் விடுதிக்குச் சென்று சேர்ந்தனர். மக்கள் இவ்விழாவிற்கு மிகவும் திரளாக வந்திருந்து, தனது அன்பையும் ஆர்வத்தையும் பெரிதும் புலப்படுத்தினர்.


## "ஞானசம்பந்தம்"

### அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் இதழ்

"ஞானசம்பந்தம்" திங்களிதழ் 27 ஆண்டுகளாகச் சைவமும் தமிழும் பரப்பிவருவதுஉலகம்அறிந்தது. தற்பொழுதுஇருபத்து எட்டாம் ஆண்டிலும் சமயப்பொருள், இலக்கணம், இலக்கியம் முதலியவற்றுடன் தெளிவான கட்டுரைகளை வெளியிட்டுவருகிறது. இதில் சந்தாதாரர்களாக உள்ளவர்களும், புதிய சந்தாதாரராகச் சேர விரும்புகிறவர்களும் சந்தாத் தொகையைக் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி "ஞானசம்பந்தம்" பெற்றுப் பயன் பெறுவார்களாக.

**ஆண்டுச் சந்தா :- உள்நாடு ரூ. 3—00 வெளிநாடு ரூ. 4—00.**

செயலாளர்: "ஞானசம்பந்தம்" காரியாலயம், தருமையாதீனம் மாயூரம் அஞ்சல், தஞ்சை மாவட்டம்.

# பாரிச வாதம்

## (ஸ்தம்பரோகம் - Paralysis)

டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

கிடைப்பதற்கரிதாம் இம் மாளிடப் பிறவி கிடைத்தாலும் அதில் எல்லா அவயவங்களும் ஒரு சீராக அமைந்து நோயற்ற வாழ்வு கிடைப்பது பெரும் பேருகும். அவ்வாறின்றி பிறவியிலேயே கூன், குருடு, முதலிய அங்கவீனர்களாகப் பிறத்தல் முற்பிறவியில் செய்த தீவினையின் பயனை ஆண்டவனல் கொடுக்கப்பட்ட தண்டனை என்றே கருத வேண்டும். அவ்வாறின்றி வாழ்க்கையின் ஒரு பகுதியில் வியாதியினலோ விபத்துக்களாலோ ஒருவன் கை, கால்களை இழக்க நேரிடின் அதன்பின் அவன் வாழ்க்கை கசந்து போகின்றது. பல பழக்கவழக்கங்களின் காரணத்தால் நம் உடலை சரிவரப் பாதுகாக்கத் தவறிவிட்டாலும் நமக்குப் பற்பல ரோகங்கள் உண்டாகின்றன. அவற்றில் வாதரோகம் மிகவும் கொடிய ரோகமாகும். ஆங்கில வைத்தியத்தில் வாத ரோகத்திற்கு மருந்தே கண்டுபிடிக்கவில்லை எனச் சொல்லுகிறார்கள். சித்த வைத்தியத்தில்தான் அதற்குத் தகுந்த மருந்துகள் இருக்கின்றன. அந்த வியாதியினின்றும் நிவாரணமும் அடைந்திருக்கின்றார்கள். வாதரோகம் எண்பது (80) வகையாகச் சித்தவைத்தியத்தில் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் பாரிச வாதத்தைப் பற்றி இங்கு ஆராய்வோம்.

ஒரு குறிப்பிட்ட இடத்திலாவது அல்லது பல இடங்களிலாவது உணர்ச்சியற்று அல்லது சலனமற்றுப் போவதற்கு ஸ்தம்ப ரோகம் (Paralysis) என்று பெயர். அசைவு மாத்திரம் இல்லாமல் போவதற்கு (Acinesia) என்றும் உணர்ச்சியற்றுப் போவதற்குத் திமிர்வாதம் (Anaesthesia) என்றும் சொல்லப்படுகிறது. இந்த ரோகம் சர்வாங்கத்திலாவது அல்லது குறிப்பிட்ட பாகத்திலாவது வருவதுண்டு. ஒருபக்கம் மாத்திரம் இந்நோய் கண்டால் பாரிசவாதம் என்றும் (Hemiplegia) கால்கள் சுவாதீனமில்லாவிட்டால் அங்கவாதம் (Paraplegia) என்றும், முகம், கால் அல்லது பாதம் இவைகளில் எங்காவது கண்டால் Local paralysis என்றும், அசைவற்ற சதைகள் க்ஷீணித்துவிட்டால் க்ஷீணவாத

(Wasting Palsy) என்றும் கூறப்படுகின்றது. நேத்திர நரம்புகளுக்கு வாதம் கண்டால் பார்வை தெரியாமல் போய்விடும். கண்விழி குருடு (Amaurosis) என்றும். இமைகளுக்கு வாய்வு கண்டால் நேத்திர வாயு (Ptosis) என்றும் செவிநரம்புகளுக்கு வாதம் கண்டால் செவிடு (Deafness), (cophosis) என்றும் வாசனை நரம்புகளுக்கு இந்த ரோகம் கண்டால் (Loss of smell, (Anosmia) என்றும், ருசி நரம்புகளுக்கு வாதம் கண்டால் ரச நாசவாதம் (Loss of taste), (Ageustia) என்றும் சொல்லப்படுகிறது. இவைகளில் ஏதாவது ஒரு வாத ரோகம் காணும். பக்குவமாகாத ரச மருந்துகள் (Mercurial Pilsy) சரியாக முடியாத வங்கபஸ்பங்கள் இவைகளை உட்கொண்டால் Lead Pilsy என்னும் வாத ரோகங்களைப் பிறப்பிக்கும்

காரணங்கள் :- நரம்புத் துவாரங்களில் துர்நீர்தங்கி தசைகளில் ஊறி வாய்வு அதிகரித்து வலி அசதி உண்டாகும். சர்வாங்க ரோகத்தைப்பற்றி வாய்வு உண்டாக்கப்படுகிறது. மேலும் இந்த ரோகத்திற்குக் காரணங்கள் அனந்தம் உண்டு அசதி, ஜன்னி, மூளையில் கட்டி காணுதலாலும் மூளை மிருதுவாகவாவது திடமாகவாவது போவதாலும், மூத்திர குண்டிக்காயில் உண்டாகின்ற வியாதிகளாலும். காக்கை வலிப்பு, வேறு பிறமேகங்களாலும், முதுகு, முள்ளந்தண்டு எலும்பில் உண்டாகின்ற வியாதிகளாலும், ஸ்பரிச நரம்பில் ரத்த அழுத்தம் (Blood Pressure) காணுவதாலும், மாமிச வியாதி, பெண்களுக்கு ஏற்படக்கூடிய சூதக வாயு, ஆகாரங்கள் விஷமித்தாலும், வாதரோகங்கள் உண்டாகின்றன.

( தொடரும் )

## நோயாளியின் குறிப்பு

My mother aged 55 years had a stroke due to hypertension on 23 May 68 and as a result, had her right hand and right leg paralysed. She was also not able to speak. She was in bed and had allopathie treatment for about three months, but with little or no improvement. Then, in the beginning of September 1968 I came to Sri K. Ramakrishnan Doctor in charge of the free Siddha Hospital and obtained siddha treatment for about three months. Due to his intensive treatment she is now able to stand up without support and also walk though with some support for short distances.

We have all now gained hope that she will eventually recover from the effects of this paralytic stroke and we are continuing the present treatment. I pray to Lord Vaidhyanatha to grant a long and happy life to Dr. K. Ramakrishnan and enable him to help many more people troubled by diseases. I also pray that the present Siddha Hospital at Vaithiswarankoil should grow from strength to strength, and be of considerable service to mankind.

(Sd.) R. Raghavendran,

Lecturer in Mathematics,
Annamalai University,
A. Nagar.

15—2—69

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Arunajateswaraswami Devasthanam, Tiruppanandal.

மக்கள் வாழ - நலமுற எல்லாம்வல்ல இறைவன் இத் தலத்தில் அடியார்களுக்கெல்லாம் காட்சிகொடுத்து அருளும் கோலத்தில் ஒரு வைபவத்தை, இன்று, குடந்தை மதிப்பிற்குரிய ஜில்லாமுன்சீப் திரு. C. துரைராஜ் அவர்களுடன் சுற்றமும் நட்பும் புடைசூழ வந்து தரிசிக்கலானேன். இறைவன் வழிபாட்டிற்கு ஏற்ப இந்தக்கோயில் ஆதீனத்தில் மிகவும் சீருடனும் சிறப்புடனும் பக்தியும் விரத்தையும்காட்டி நிர்வாகத்தை நடத்திவரும் பெருமை, ஆண்டவன் புனிதத்தன்மையையும் கோயில்களைச் சென்று பார்க்கும் பக்தர்களுக்குப் பரவசமூட்டும் வகையில் பரிபாலித்து வருகிறார்கள். ஆண்டவன் பரிபூர்ண கடாக்ஷம் நிர்வாகத்தாருக்கு இருப்பதால் அவர்கள் தொண்டின்மூலம் மன நிம்மதியும் ஆண்டவன் அருளும் கிடைக்க எங்களுடைய பிரார்த்தனையாகும். தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

(ஒ-ம்.) S. வெங்கட்ராமன்,
சப் மாஜிஸ்ட்ரேட், குடந்தை.

(Sd.) C. Durairaj,
D. M. Kumbakonam.

27—4—69.

# எதிர்காலம் - திரு. K. முத்துஜோதிடர்

( சௌம்யஹூ வைகாசிமீ 1உ முதல் 32உ முடிய )

( 14—5—69 முதல் 14—6—69 முடிய )

**1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

மேஷராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத் தரும். இடம் மாறுதல் ஏற்படும். தொழில் மாறுதல் ஏற்படும். சுலப மாகப்பொருள் நஷ்டம் உண்டாகும். காரியங்கள் தாமதமாகும். மாதக்கடைசியில் எல்லாம் நன்மையாக நடக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

**2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½**

ரிஷபராசி 9 பாதங்களும், ஜீவன லாபத்தை உண்டு பண்ணும். தெய்வபலம் முன்னின்று காக்கும். சாதிக்க முடியாத காரியங்கள் எல்லாம் சுலப சாத்தியமாகும். வியாதி சாந்தியாகும். புதிதாகத் தொழில் ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

**3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிதுனராசி 9 பாதங்களும் சுபத்தையே உண்டுபண்ணும். தொழில் விருத்தியாகும். சாதுக்களுடைய சேர்க்கை உண்டாகும. உலகப் பிரசித்தி உண்டாகும. ஆரோக்யம் உண்டாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்**

கடகராசி 9 பாதங்களும் சுபத்தையே தரும். வித்யா விருத்தியாகும். கடன் நிவர்த்தியாகும். நஷ்டமான பொருள் வந்து சேரும். அடிக்கடி சஞ்சாரம் ஏற்படும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

### 5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் விசேஷமான நன்மையை உண்டு பண்ணும். உத்தியோகத்தில் உயர்பதவி ஏற்படும். இடம் மாறுதல் ஏற்படும். இல்லற சுகம் ஓங்கும். மேலோர் பெரியோர்களின் அன்பு உண்டாகும். ஆரோக்யம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

### 6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமாகும். மிச்ரமான பலனும் ஏற்படும். சதா சஞ்சாரமும், ஆரோக்யக்குறைவும் உண்டு பண்ணும். நஷ்டமான பொருள் வந்து சேரும். எல்லாக் காரியங்களும் சுலபமாக நடக்கும். மாதம் பிற்பாதியில் ஆரோக்யமும், சுகமும் உண்டாகும். உலகத்தில் நன்மதிப்பு உண்டாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

### 7. துலாம் - சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். வரவு செலவுகள் சமமாக இருந்து கொண்டு இருக்கும். எப்பொழுதும் அலைச்சலை உண்டுபண்ணும். பெரியோர்களின் அன்பு உண்டாகும். ஆரோக்யம் உண்டாகும். தெய்வபலத்தால் எல்லாக் காரியங்களும் சுலபமாக நடக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

### 8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும், சுபமான பலனைத்தரும். வம்சம் விருத்தியாகும். புத்திரன் ஏற்படும். கிரகசுகம் உண்டாகும். விவாஹாதி சுபகாரியங்கள் ஏற்படும் ஜீவன லாபம் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

### 9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். புத்திராதிகளால் கவலை நீங்கும். ராஜாங்கம் மூலம் நன்மை உண்டு பண்ணும். விசேஷமாக தெய்வபத்தி உண்டாகும். விவாஹாதி சுபகாரியங்கள் உண்டாகும். பிரதிஷ்டா பலன்களையும், யாக

யக்ஞ பலன்களையும் கொடுக்கும். கவலை நீங்கும். ஆரோக்யம் உண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

**10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½**

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனையே கொடுக்கும். உத்தியோகத்தில் ஸஞ்சாரத்துடன் மேல்பதவி கிடைக்கும். ஆரோக்யம் உண்டாகும். குடும்பம் ஓங்கும். உலகப் பிரஸித்தியும் நன்மதிப்பும் உண்டாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் தானாக வந்துசேரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**11. கும்பம்-அவிட்டம் ½. - சதயம் - பூரட்டாதி ¾.**

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். இடம் மாறுதல் ஏற்படும். ஸஞ்சார பலன் உண்டாகும். கிரஹசுகம் ஓங்கும். குடும்பத்தினர்களாலும் புத்திரர்களாலும் மேன்மேலும் பொருள்கள் வஸ்திரங்கள் எல்லாம் கிடைக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

**12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.**

மீனராசி 9 பாதங்களும் சுபத்தையே உண்டுபண்ணும். ராஜாங்க ஸ்னேகம் ஏற்படும். உத்தியோகத்தில் மேல்பதவி கிடைக்கும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். சுபசோபனதிகள் மூலம் சஞ்சாரம் உண்டுபண்ணும். பெரியோர்களின் அன்பு உண்டாகும. கிரக சுகம் ஓங்கும். எல்லாக் காரியங்களும் சுலபமாக நடக்கும். தெய்வபலம் ஏற்படும். சுபம் உண்டாகும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

குறிப்பு: சித்திரை மாதத்தில் சனிப்பெயர்ச்சி ஏற்பட்டு சூரியனுடன் செயற்கை ஏற்பட்டும் புதசுக்ராளுக்கு வக்ர அதிகாரமும் ஏற்பட்டபடியால் ஆஸ்திக சஜ்ஜனங்கள் தெய்வ பலத்தைக்கொண்டு நலன் அடைவார்கள். இயற்கைகளால் நன்மை உண்டாக ஆங்காங்கு தேவதா பிரார்த்தனைகள் நடந்து கொண்டு வந்தால் பருவ காலங்களில் நடக்கவேண்டியவைகள் எல்லாம் மாறுமல் இருந்துகொண்டு உலகத்துக்கு நன்மையைத் தரும். உலகம் சுபிக்ஷம் அடையும். கடவுள் காப்பார். சுபம் உண்டாகும். சுபம்.